# பிரஜாநுகூலன்.

அநுபவ விநோதங்களடங்கிய மாதப்பத்திரிகை.

வருஷ சந்தா ரூபா 2.] Copy Right. [வெளிநாடு ரூ. 2—8—0.

| வருஷம் 14. | திரிச்சிராப்பள்ளி:<br>ஜூன்மீ —1918. | மாதம் 7. |
|---|---|---|

## இனிய குறிப்புகள்.

தங்கள் சொந்த ஸக்திகளில் ஆழ்ந்த நம்பிக்கை வைப்பதும், உயர்ந்த விருப்பங்கள் கொண்டிருப்பதும், எந்த ஜனங்களானாலும்—அவர்களுக்குப் பெருமையும், முன்னேற்றத்துக்குக் காரணமுமே யாகுமன்றி, ஆக்ஷேபங்களாக ஒருக்காலும் புத்திமான்கள் நினைக்கமாட்டார்கள்.

உலகத்து மற்றத் தேசங்களில் வசிக்கும் ஸ்திரீகள், தங்கள் ஸக்தியையும் புத்தியையும் தங்கள் இனத்தாரின் அபிவிருத்தியின்பொருட்டும் தேசக்ஷேமத்தை ஆதரிக்கும்பொருட்டும் உபயோகித்துவர, இந்திய மாதர்கள் மட்டும் தங்கள் ஸக்தியையும் புத்தியையும் வீட்டுவேலைகள் செய்வதிலேயே செலவிட்டுவருவது சரியென்று எப்படிச் சொல்லமுடியும்?

தான் விட்டுவிலகவேண்டிய கெட்டவழக்கம் ஒன்றுகூட இல்லாத ஒரு மனிதனை இப்பூலோகத்தில் கண்டுபிடிப்பது மகா கஷ்டம். உயர்ந்த அந்தஸ்திலும், மேன்மையும் பரிசுத்தமுமான இடங்களிலும் இருந்து, மற்றவர்களால் பெரியோர்களாய் மதிக்கப்பட்டிருக்கிறவர்களும்கூட, சில விஷயங்களில் தங்களை அடக்கி ஆளக்கூடாதவர்களாக யிருக்கிறார்கள்.

மாமிசம் சாப்பிடாமல் அதை நீக்கிவிடுவதனால், சுகதேகியாய்ப் பிழைத்திருக்கக் கூடாத ஒரு மனுஷனாகிலும் இப்பிரபஞ்சத்தில் இல்லை. புகையிலை, தேயிலை, காபி, இறைச்சி இவை அவசியமான வஸ்துக்களா? சாப்பிடுகிறதற்கென்று பிழைத்திருக்க எண்ணாமல், பிழைத்திருப்பதற்காகச் சாப்பிடுவதாய் நினைக்கவேண்டும்.

## என் மூடத்தனம்.

“நானேன் பிறர் காரியத்தில் பிரவேசிக்கவேண்டும்? என் மூடத்தனத்தைப்பற்றி நொந்துகொள்ளுகிறேன்” என்று சிலர் அடிக்கடிகூறுவர். இங்ஙனம் உரைப்போர் உத்தமகுணமுடையவர்களேயாவர். எப்போதும் பிசகுசெய்யும் நம்மை நாமே வெறுத்துக்கொள்வது நன்மை. ஆனால் அப்படி வெறுத்துக்கொண்ட பின்னர் மறுபடியும் அவ்வித தப்பிதத்தையே

செய்வது கூடாது. பிறரை ஏமாற்றுவதைவிட தன்னையே ஏமாற்றிக்கொள்வது பெரும் பிசகு. கண்டிப்பதும் தண்டிப்பதும் எதற்காக? மறுபடி பிசகு செய்யாமலிருக்கவேயாம். ஆகவே தன்னைக் கண்டித்துக்கொள்வோன், பின் தானே பிசகுசெய்ய எண்ணுவது எத்தனை மதியீனம்? முன் ஒரு பாதிரியார் பிரதிதினமும் தாம் செய்யும் பாவங்களுக்கெல்லாம் ஒரு கணக்கு வைத்துக்கொண்டு படுக்கைக்குப் போகும்போது மிகுந்த வியசனமடைவார். இப்படியே செய்து ஒரு வருஷத்துக்குள் ஸர்வ பாபங்களையும் ஒழித்து புண்யவானாக விளங்கினார். இவரைப்போல் "என் மூடத்தனம்" என்று சொல்லித் தன்னையே நிந்தித்துக்கொள்வோர் காரியத்தில் கருத்துள்ளவர்களாய் சீக்கிரத்தில் பத்திசாலிகளாவது விவேகம்

# ஹிதோபதேசம்.

1. மலடிகள் பிரஸவ வேதனையை யறியாததுபோன்று, கல்லாதவர்கள் நூல் எழுதுவதினுடைய பரிசிரமத்தை யுணரார்.

2. விருக்ஷங்களுக்கு வசந்த ருது யௌவனம். புருஷனுக்குத் தனம் யௌவனம். ஸ்திரீகளுக்குச் சௌபாக்கியம் யௌவனம் பண்டிதனுக்கு வித்தையே யௌவனமாம்.

3. மேன்மையைக் கோரினவனே பந்து. காப்பாற்றினவனே தந்தை. விசுவாசமுள்ளவனே சிநேகிதன் சுகமுண்டாக்க வல்லவளே மனைவி.

4. பாடும்பொழுதும், கணவனுடன் ஸல்லாபிக்கும்போதும், வாத்தியம் வாசிக்கும்பொழுதும், நாட்டியமாடும்பொழுதும் உண்ணும்பொழுதும், வியவகாரம் பேசும்பொழுதும் வெட்கத்தை விட்டவர்களுக்கே சுகம் கிடைக்கும்.

# பதினாறும் வயது.

மனுஷ்யனுடைய ஜீவவாழ்க்கையில் 16-ம் வயசு ஒரு திரும்புமுகமாகக் கருதப்படுகிறது. நவ யௌவன ஆரம்பமும் அந்தப் பருவத்திலதான். அதற்குரிய சகல சின்னங்களும் அவ்வயதிலேதான் பிரதிபலிக்கின்றன. அன்றியும் ஒருவனுடைய நடை, உடை, பாவனையெல்லாம் பேதமாவதும் அவ்வயதிலேதான். குரல் உடைவதும், குணம் கோணுவதும், தேகம் மாறுவதும் வெகுவாய் அக்காலத்தில்தான். 16-வயதுள்ள பாலகுமாரி யென்பதும் இப்பருவ எழில் நோக்கியே யென்க.

# சிக்கனம்.

சிக்கனம் ஒரு பெருங்குணம். அது தனி மனிதனுக்குமட்டுமல்ல; ஜனஸமூகத்துக்கும், பெரும் ராஜ்யங்களுக்குங்கூட நன்மையும் பலத்தையும் தருவது. அந்தக் குணம் எங்கில்லையோ அங்கே நாசம் நேரிடுவது நிச்சயம். சிக்கனம் உள்ளவன் சுகப்படுகிறதன்றி அவன் குணமும் உயர்கிறது. ஆங்கிலத்தில் ஒரு பேர்போன கதைப்புஸ்தகத்தில் மிகாபர் என்பவர், டேவிட் காப்பர் பீல்ட் என்பவனுக்குப் புத்திசொன்னதில்,

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருஷ வரும்படி பவுன் | 20 | 0 | 0 | § | வருஷ வரும்படி பவுன் | 20 | 0 | 0 |
| வருஷச் செலவு பவுன் | 19 | 19 | 6 | | வருஷச் செலவு பவுன் | 20 | 0 | 6 |
| பாக்கி | சுகம். | | | | பாக்கி | துக்கம். | | |

என்றும் கூறினாராம். இதன் பொருளை உய்த்துணர்க.

# பால ஜோசியம் விருத்த வைத்தியம்.

பால ஜோசியம்:—ஜோசியத்தில் கணக்கு முக்கியமாகையால், வயோதிகர்கள் ஞாபகஸக்தி குறைந்து, ஜோசியக்கணக்கில் பிசகி எதிர்கால சம்பவத்தைச் சரிவர உரைக்கத் தவறிப் போகலாம். ஆகவே ஞாபகஸக்தி தடுமாறாதுள்ள பால்யத்திலிருந்துகொண்டு கணக்கிடும் ஜோசியம் பிசகாமல் சரியாயிருக்குமென்பது.

விருத்த வைத்தியம்:—பால்ய வைத்தியனைவிட தன் நீண்ட வயதுக்குள் அநேகருக்கு வைத்தியம் செய்து தன் வாழ்நாள் முழுதும் அநுபவம் கண்டு, நோய்க்குத் தகுந்த ஔஷதம் தெரிந்துள்ள கிழவனின் வைத்தியம் சிலாக்கியமென்பதும் பலிக்குமென்பதுமாம்.

நமது வியாக்கியானமோ இன்னொருவிதம்:—பால—அதாவது கைக்குழந்தையாய் இருக்கப்பட்டவர்களுக்கு 12-வருஷம் பாலாரிஷ்டம் இருப்பதால், அவைகளை நுணுக்காய், கருத்தாய், கவலையாய், கண்டுபிடிப்பதென்றால் யானைக்கும் அடிசரக்கும் என்பதுபோல் பிசகிவிடக்கூடும். ஆகையால் சிசுக்களுக்கு யோகாதிகள் பார்த்து ஜாதகத்தால் நம்புவது கூடாதென்பதாகும். இதுவே பாலஜோசியம் என்பதற்கு நாம் செய்யும் அநுபவ அருத்தம். இனி, கிழவர்களுக்கு இரத்தம் சுண்டி, கொழுப்பு குறைந்து, நரம்பு தளர்ந்து தள்ளாடி நிற்குங்காலத்தில் வைத்தியம் செய்வதென்றால்—வைத்தியத்தை நம்புவதென்றால் அந்த வைத்தியம் அவ்வளவாசப் பயன்படாதென்பதாம். நமது கோணல் வியாக்கியானம் சரிதானா?

# அம்மா சோறு. அப்பா கஞ்சி!

அதுதாண்டா காணோம் மக்களா! எல்லாம் இருக்குது பெட்டியிலே இலைக்கறி சடையத்தாண்டி சட்டியிலில்லை" என்பதாக இந்த நாளிலே என்னதான் குறைச்சலாயிருக்கிறது? மேலே பாத்தால் மினுக்கு, உள்ளே பார்த்தால் மூணுக்கு என்பதாக ஊர் சிங்காரமென்ன? உடுபாவனை சிங்காரமென்ன? வண்டிகளென்ன? மாடங்களென்ன? கூடங்களென்ன? சித்திரவிசித்திரங்களென்ன? எல்லாம் சரிதான், அதைக் காணோமே! ஜீவிக்கும் உபாயம் எப்படி? எந்தப் பிழைப்புதான் ஏற்றதுவோ! எந்தப் புத்தியைக் கொண்டுதான் ஈடேறுகிறதோ! ஈசனே! ஈசனே!

# பிரபஞ்ச விலாசம்.

1. நன்றாய் சம்பாதிக்கும்காலத்தில் கொஞ்சம் துட்டுசேர்த்து வைப்போமென்றால்—என்னென்னவோ செலவுகள் வந்து நேர்கிறது. செலவோ வரவை மீறிவிடுகிறது. நூறு நூறாய் வந்து, நூறு நூறாய்த் தொலைந்து போகிறது.

2. மூன்று ரூபாய் கடன்கேட்டால் அதைக் கொடுக்க நம்பிக்கையில்லை. 300 ரூபாய் நகையை இரவல் கேட்பினோ உடனே எடுத்துக் கொடுத்துவிடுகிறார்கள். இதுவும் ஒரு அதிசயமே.

3. சிலர் எவர் வீட்டுக்குச் சென்றாலும், அதுவை, இதுவை என்று நாக்கூசாது கேட்டு வைக்கச்சொல்லி நன்றாக சாப்பிடுகிறார்கள். அதிகாரமும் செய்கிறார்கள். எல்லோருக்கும் இப்படி அமைவதில்லை. இதுவும் ஒரு அதிர்ஷ்டந்தான். மற்றவர்கட்கோ கேட்க வாய் வருவதில்லை. நாணம் வந்து தடுக்கிறது.

4. பேர் பெரிதாயிருக்கிறதே என்றெண்ணி நம்பி மோசம்போனவர்கள் அநேகர். பெரிய இடங்களில்தான் வஞ்சனையும், மோசமும், கைவிடுதலும், ஏமாற்றமும் அதிகமிருக்கும்.

5. கடவுளினும் கருணை பிசகியவரும் வேறிலர். அவரிலும் கருணையிருந்து நிற்பவரும் வேறிலர். வாட்டினால் முழுதுமே வாட்டிவிடுகிறார். பட்டசாலிலே படைக்கிறார். சில கிரந்தகர்த்தர்கள்கூட, தாங்கள் கடவுள் ஸ்தானத்திலிருந்துகொண்டு கருணைகெட்டவர்களாய்த் தாங்கள் இயற்றும்—சிருஷ்டிக்கும்—கதையினை சோகமாகவே முடித்துத் தெரிவித்துவிடுகிறார்கள். இப்படிச் செய்வதில் இவர்களுக்கு என்ன இன்பமோ? அப்படி வாட்டுவதில் கடவுளுக்கு என்ன ஆநந்தமோ?

6. தாம் சந்திப்போரையெல்லாம் வசியம் செய்துவிடவேண்டுமென்ற புத்திப்போக்குடனேயே திரியும் ஒரு வகுப்பார் இருக்கிறார்கள். இவர்களின் சாமர்த்தியமும் நளினமும், ஒரு நிமிஷத்தில் அந்நியரைச் சிநேகம் செய்துகொண்டுவிடும் தன்மையும், அவர்களது பேச்சும் பல்லிளிப்பும் ஆச்சரியகரமானவை.

7. பெண்கள் எந்தப் புதுவீட்டிலும் தாராளமாகப் பழகியவர்களைப் போல் உள்ளே நுழைந்துவிடுகிறார்கள். புருஷர்களோ வெளித்திண்ணையில் காத்துக்கிடக்கவேண்டியதே.

8 கோபமும் பிகுவும் சிடுசிடுப்பும் கொஞ்சம் கைவசம் இருக்கவேண்டியிருக்கிறது. இல்லாவிட்டால் குடும்பத்தில் நம்மை ஏமாற்றிவிடுகிறார்கள் இளிச்சவாயன் என்று சொல்லத் தலைப்பட்டுவிடுகிறார்கள். உள்ளே சாந்தமும், வெளியே கோபநடிப்பும்தான் சரி.

இரண்டும் ஒன்றுதான்:—விகட ஞானியொருவர் எழுதுகிறார். நான் குடித்துக்கெடுவது மெய். நீ குடியாமல் கெடுவது மெய் நான் பெண்டுடன் இருந்துகெடுவது மெய். நீ சுவாமியாராய் இருந்துகெடுவது மெய். நான் கொஞ்சம் திருடிக்கெடுவது மெய். நீ அதிகம் திருடிக்கெடுவது மெய் நான் தின்றுகெடுவது மெய். நீ தின்னாமல் கெடுவது மெய். நான் செலவு செய்து கெடுவது மெய். நீ புதைத்துக் கெடுவது மெய்.

## மதிப்புரை.

சந்திரசேகரி:—இது ஸ்ரீமான் வே௪ இராஜு செட்டியார் M. B. P. I. அவர்களின் கற்பிதம். லோக அநுபவங்களை வெகு பக்குவமாய்க் கதையினூடே பிரயோகிப்பதில் இதன் ஆசிரியர் மிகு சமர்த்தர். நூல்முற்றிலும் அநுபவமே—அதிசயமே. கிரந்த கர்த்தாவின் அபிப்பிராயங்கள் உயர் நலஞ்சார்ந்தவை. உள்ளபடியே பாடுபட்டு நாவல்கள் வரைபவருள் இதன் ஆக்கியோனும் ஒருவராவர். இவர் செல்லும் வழியனைத்தும் நவீனமே. புதுவழியிலேதான் இவரது நூல் இருக்கும். தம்மனதிற் பட்டதை அப்படியே அஞ்சாது தெரிவிப்பதில் இவர் நன்கு பழகியவர். கதையின் முடிவு மனோரம்யமாயினும், கதாநாயகனின் பெற்றோர்களையும் காட்டுதல்வேண்டும். முகவுரையின் இறுதியிலுள்ள திருத்தக்குறிப்பு அகற்றப்படின் வயோதிகரின் மர்மம் முதலில்தானே வெளிவராது ஸ்வாரஸ்யம்தரும். மேனாட்டுக் காதலைக்குறித்த புகழுரைகளை சந்திரசேகரியினது—கண்டதும்கொண்ட—கிருஷ்ணசாமியிடத்துச் செலுத்திய காதலின் இறுதி முடிவானது—முற்றிலுமேமறுக்கின்றது. நெறிபிறழ்ந்தார்தம் தன்மையும் தூர்த்தர்களின் இயல்பும் இத்தனைத்தென நன்கு காட்டப்பட்டுள்ளது. தமிழ்நடை மிகுஇனிமை. விலை ரூ ஒன்றே. ஆக்கியோனுக்கு நமது வந்தனங்கள்.

# அத்தியாயம்—16

## காதலர் சோதனை

கோர்ட்டிலிருந்தும் நமது கதாபுருஷர்களும், ஸ்திரீ ரத்தினங்களும் வீட்டிற்குத் திரும்பினார்கள். மங்கள வாத்தியங்கள் முழங்க, வழிதோறும் புஷ்ப வருஷங்கள் வருஷிக்க, அடுக்கடுக்காக மோட்டார்களும், இருபுரவிகள் கட்டிய ரதங்களும் பின் தொடராநிற்ப, மிக்க வைபவத்தோடும் கிரகப்பிரவேசம் செய்தனர். சுண்ணாம்புக்காரத் தெருவும் சௌந்தரப்பாண்டியன் தெருவும் ஒன்றையொன்று நெருங்கிய அடுத்துள்ள தெருக்களாகும். யாவரும் விருந்துண்டு களித்த பின்னர் ஒரு பெரும் சபை கூடிற்று. நமது கதா புருஷர்களுக்கு வேண்டிய பலரும் வந்திருந்து பரஸ்பரம் க்ஷேமம் விசாரித்தனர். வேணுகோபால் நாயுடு தாம் பிரேமநாதனைத் தேடுதற்பொருட்டு பல இடங்கட்கும் சென்று, கடைசியில் பம்பாயில் பிளேக்கினால் பிராணபயமான நிலைமையை அடைந்து விடவே, வைத்தியாதிகாரிகள் தாம் இறந்துவிடும் நிலைமையிலிருப்பதாகவும், இன்னும் இரண்டொருவர் தாம் இறந்தே விட்டதாகவும் அரசப்பனுக்குத் தெரிவித்துவிடவே அவன் பிரலாபத்துடன் தனியே ஊர் வந்து சேரவேண்டியதாயிற்றென்றும் கூறினர்.

அரசப்பன் இரண்டாவது உயில் பத்திரத்தை பம்பாயில் ரிஜிஸ்தர் செய்துவிட்டு அந்தப் பத்திர சகிதமாய் திரிச்சிக்குத் திரும்பினான். இங்கு அவன் வந்தபோது கனகவல்லிக்கும் ஜெகநாத நாயுடுவுக்கும் எதிர்பாராத விதமாக விவாகம் நடந்திருப்பதைக் கண்டு திகைத்தான். ஜெகநாத நாயுடுவைப் பார்த்தபோது அவன் மனதில் திருப்தியான எண்ணம் உண்டாகவில்லை. ஆரம்பத்தில் ஒருவரைப் பார்த்த மாத்திரத்தில் மனதில் என்ன அபிப்பிராயம் உண்டாகிறதோ—அது தான் கடைசி வரையும் சரியாகி

விடுகின்றது. எனவே அரசப்பன் தான் ஜெகநாதநாயுடுவின் மனப்போக்கை யறிய விரும்பினன். வேணுகோபால் நாயுடுவின் முதலாவது உயிலின்படி ஸர்வ சொத்துக்களும் கனகவல்லியையே சேருவதா யிருந்தன. ஆகவே தனது மனைவியின் சொத்துக்களை ஜெகநாத நாயுடு அபகரிக்கும் குணம் ஏதேனும் கொண்டிருக்கிறரா என்பதை அறிவதற்காக, இரண்டாவது உயில் பத்திரத்தை வெளிக்குக் கொண்டுவராமல் மூடிவிட்டான். இரண்டாவது உயிலின்படி (பக்கம் 155) வேணுகோபால் நாயுடுவின் ஸர்வ சொத்துக்களும் ரங்கபாஷியத்தைச் சேருகிறது. ஜெகநாதநாயுடு மீறினல், இரண்டாவது உயிலைக்கொண்டு அவன் கர்வத்தைத் தவிடுபொடி செய்யலாமெனக் காத்திருந்தான். இதுமட்டுமேயல்ல. வேணுகோபால் நாயுடுவும், பிரேமநாதனும் லண்டனில் ஸுகமே இருந்து வருவதும் அவர்களிட மிருந்து பிரதி கப்பலுக்கும் தனக்குக் கடிதங்கள் வந்துகொண் டிருந்தும் கூட—இந்த ஜெகநாதநாயுடுவின் குணத்தை யறியும்பொருட்டாக—வெளியில் எவருக்கும் சொல்லாமல் மறைத்து விட்டான். லண்டனிலிருந்து வரும் கடிதங்களைப் படித்து விட்டு உடனுக்குடனே அதைக் கிழித்தெறிந்து விடுவதா யிருந்தான். ஜெகநாதன்மீது அவ்வளவு சந்தேகம் அரசப்பனுக் கிருந்ததின் காரணம்—தன் மீது ஜெகநாதன் முன்னர் திருட்டுக் குற்றம் சாட்டியதேயாகும். இந்த வரலாற்றை எற்கெனவே விவரித்துள்ளோம். இவ்வளவு ஜாக்கிரதையா யிருந்த அரசப்பன் பிரேமநாதன் கொலையால் தனது ஆசைகள் வீணுகி சித்தஸ்வாதீனம் அற்றுப்போனதும், அவன் வீட்டை ஸஞ்சீவ பாபு சோதித்து இரண்டாவது உயிலைக் கண்டெடுத்து—மட்டுக்கு மீறிய ஜெகநாதனை அடக்கியதும் நம் வாசகர்கள் நன்குணர்ந்ததே.

இனி, வேணுகோபால் நாயுடுவின் பிந்திய கதையைக் கவனிப்போம். அவர் பிணைக் வியாதியி லிருந்து ஆயுள்பலத்தால்—அதிஷ்ட வசத்தால்—உயிர் பிழைத்த பின்னர், டாக்டர் அவரை சமுத்திர யாத்திரை செய்யும்படி கூறினர். இளைத்த உடம்புக்கு

அது வலிவு கொடுக்கும் என்றனர். பணமுள்ளவர்களுக்குக் கடல் யாத்திரையும், நம்போன்ற ஏழைகளுக்கு அந்தக் கடல் உப்பையும் தேக வலிவு கொடுக்கும் சாக்குகளாகக் கடவுள் அமைத்துள்ளார் போலும்! இதில் நம்போன்ற ஏழைகளுக்கு என்று நாம் பிரயோ கித்திருப்பது,—இந்நூலை வாசிக்கும் கனவான்களிற் சிலர் ஐச் வர்ய ஸம்பன்னர்களா யிருக்கலா மாதலின்,—அவர்களுக்கு அப் பதப் பிரயோகம் பொருந்தாதலின் அதனை,—எம்போன்ற ஏழை களுக்கு,—என்று திருத்திப் படித்துக் கொள்ளவேண்டுகிறோம்.

வேணுகோபால் நாயுடு சில மாதங்கள் பொறுத்து அரசப்ப னுக்கு ரகசியக் கடிதம் வரைந்து லண்டனுக்குச் செல்லப் பணம் அனுப்பும்படி கூறினர். வேணுகோபால் நாயுடுவின் இரும்புப் பெட்டியின் சாவி அரசப்பனிடமே உளது. அவன் எவ்வளவு கொள்ளை அடித்தாலும் அடிக்கலாம். அவனைக் கணக்கு கேட் போர்—சம்சயிப்போர் எவருமில்லை. ஆயினும் அவன் தனது சம்பளமாக 15-ரூபாய் மட்டும் எடுத்துக் கொள்வானே யன்றி அதற்குமேல் ஒருகாசும் தொடான். எஜமான் பக்தி அவனுக்கு அதிகம். வெகு சந்தோஷத்தோடும் பணத்தை வேண்டிய வரை யில்; ரகசியமாக வேணுகோபால் நாயுடுவுக்கு அனுப்பினன். வேணுகோபால் நாயுடுவின் லண்டன் யாத்திரையும் சுகமாக நிறைவேறிற்று. ஒரு தினம் அவர் நடந்து ஒரு தெருவின் வழி யாகச் செல்லுகையில் தான் பிரேமநாதன் அவரை மாடியிலிருந்து கண்டுகொண்டு உடனே ஓடிவந்து அவரை அழைத்ததாகும். இவ் வாருகத் தந்தையும் தனயனும் ஒன்ருயினர். இதற்குப் பிறகு தான் லக்ஷ்மீகாந்தம் இவர்களைச் சந்திக்கும் சந்தர்ப்பம் பெறுவதா னுள். அந்த விஷயங்களை ஏற்கெனவே விவரித்துள்ளோம். அதற்குப் பின்னர் தான் பிரேமநாதன் தன் தோழனுன ஜெகநாத னுக்குக் கடிதம் எழுத முயன்றதும், பணம் அனுப்ப ஆரம்பித்தது மாகும். இவ்விஷயங்களை யெல்லாம் வேணுகோபால் நாயுடு அனைவருக்கும் விவரமாகக் கூறினர். பார்ப்பதற்காக வந்திருந்த அனைவரும் ஆநந்த பரிதர்களாய் விடைபெற்றுச் சென்றனர்.

நமது சுப்பம்மாள், அதாவது ஜெனகலக்ஷ்மியின் தாயார் ஸஞ்சீவ பாபுவை தன் வாய் கொண்டமட்டும் புகழ்ந்து கூறினர். ஜெனக லக்ஷ்மியோ எனது அண்ணு அவர்கள் தந்த மாங்கல்யம்—என் ருள். ஸஞ்சீவ பாபுவுக்கு என்ன பரிசு கொடுக்கிற தென்று வேணுகோபால்நாயுடு வினவினர்,அதற்கு சுப்பம்மாள் பிரேமநாத னுக்கு இராஜம்மாளை விவாகம் செய்து தந்தால் அந்த பாணிக்கிர கண மகோற்சவ தரிசனப் பரிசே ஸஞ்சீவ பாபுவுக்குப் போது மென்ருர். ஸஞ்சீவ பாபுவும் அதுவே தமது விருப்பமெனத் தெரிவித்தார். இரண்டாயிரம் ரூபாயுள்ள ஒரு பையை வேணு கோபால் நாயுடு அவருக்குத் தர வர, ஸஞ்சீவ பாபு—வருத்தத் துடன் நான் பணத்திற்காக வேலை செய்ய வில்லை; எனது அபி மான மாதாவாகிய சுப்பம்மாளுக்கும், எனது அபிமான சகோதரி யான ஜனகலக்ஷ்மிக்குமே நான் இவ்வளவுக்குப் பாடுபட்டது— என்று கூறினர். உடனே ரங்கபாஷியம் நாயுடு எழுந்து வந்து ஸஞ்சீவ பாபுவின் கைகளைப்பற்றிக் கொண்டு, வருத்தப்படக் கூடாது—நான் ஏதாகிலும் உமக்குப் பரிசு தந்திருந்தாலன்ருே நீங்கள் சினக்குறி காண்பிக்கவேண்டும். உங்களின் அன்பை நான் முழுதும் உணர்ந்தவன். ஆதலின் இனி ஜனகலக்ஷ்மியை சொந்த சகோதரியாகவே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று புன் சிரிப்புடன் பேசினர். என்னுடைய ஜனகலக்ஷ்மிக்கு நீர் என்ன நடுவில் சிபார்சு பேச வருவது—ஏற்றுக் கொள்ளென்று சொல் வது—இந்த வீட்டிக்கு நானல்லவோ அதிகாரி. தங்கையின் சொத்து அண்ணனுக்கும் பாத்தியம். நீர் யாரையா அன்னியர் இடையில் இப்படி வந்து பேசுவது—என்று ரங்கபாஷியத்தைப் பார்த்து ஸஞ்சீவ பாபு கூறினர். இவ்வாருன விநோத பாஷிதங் களில் வெகு உற்சாகமாகப் பொழுது போயிற்று. ஸஞ்சீவ பாபு பின்னும் சில தினங்கள் இருந்து, பிரேமநாதன் விவாகத்திற்கு வருவதாகக் கூறி அனைவரிடமும் விடை பெற்றுக்கொண்டு கல் கத்தாவிற்கு வெற்றியோடும் புறப்படுவ தானர்.

கதையெல்லாம் முடிவுக்கு வந்துவிட்டதென்று நமது

நேயர்கள் நினைக்கலாம். அப்படியில்லை, இன்னும் ஸ்வாரஸ்ய மான விஷயங்கள் பின்னுக்கு வருகின்றன. கதை முடிந்தது போலத்தான் தோன்றும். ஆனால் அதற்குள்ளிருந்து இன்னென்று புறப்படும். மனிதர்களுடைய வாழ்நாட்களே கதைகளால் ஆக் கப்பட்டுள்ளன. இதை வாசிக்கும் நேயர்கள் தாங்கள் பிறந்தது வளர்ந்தது—இப்போதிருக்கும் நிலைமை—இவற்றை யெல்லாம் ஆதியோடந்தமாக யோசித்துப் பார்ப்பார்களாயின்—அவைகளும் மிக்க நேர்த்தியான கதை—நாவல்—ஒன்று எழுதுதற்கு ஏற்ற தாகப் பொருந்தியிருப்பதை நன்கு கண்டுகொள்வார்கள். ஆனால் அங்குவேண்டிய ஒரு விஷயம் யாதெனில், அவற்றையெல்லாம் கோர்வையாகச் சேர்த்து ஒரு கதையாக—நாவலாக—எழுதி உரு வகப்படுத்தும் ஸக்தி யொன்றுதான் தேவைப் படுகின்றது.

இது இங்ஙனமாக, ஒரு தாய் வயிற்றுக் குழந்தைகளான லக்ஷ்மீகாந்தமும் கனகவல்லியும் ஒன்று கூடினர்களே! அவர் களைப்பற்றி இங்கு சிறிது சொல்வோம். இரு பெண்மணிகளும் லோக கஷ்டங்களில் நன்ருக நீந்திப் போதிய அநுபவக் கரை கண்ட புனிதவதிகள் என்பதை நம் வாசகர்கள் அறிந்ததே. லக்ஷ்மீகாந்தம் தனது கதைகளையெல்லாம் கனகவல்லிக்குக் கூறி தனது பர்த்தாவான குலசேகரனின் கதி யாதாயிற்ருே என்று அழுது புலம்பினள். கனகவல்லியும் தனது கஷ்டங்களைக் கூறி மனது நொந்தாள். அதன் பின்னர் இரு பிரேம சகோதரிகளுக் குள்ளும் பின்வருமாறு சம்பாஷணைகள் நடந்தன.

கனகவல்லி.—“அக்கா! உனது காதல் தாகம் தணிவது எப் போதோ? அந்த நாள் உனக்குத் தெரியுமா?”

லக்ஷ்மீகாந்தம்.—தங்காய்! காதல்தாகம் தணிந்துபெருகுவது எப்போது என்று அப்படித் திருப்பிக் கேள். தணிவதும், தணியத் தலைவிதி வாய்ப்பதும் விதவைகட்கே. கணவனிடத்தே துவேசம் பாராட்டும் மடவார்க்கும் தணிவதே பிரியமாயிருக்கும். உத்தமி கட்குத் தணிந்து பெருகுவதே வாழ்க்கையின் நியதி—நோக்கம்— கிரமம்—லக்ஷணம்—கற்பு. ஒரு பெண் யுவதித்தன்மையைஅடைந்த

வுடனே, அதைப் பத்து தினங்களும் பரவச மூதிர்ச்சியோடும் பாராட்டிக் கொண்டாடுங் கொள்கைக்குக் காரணமென்ன? காதல் தாகத்தினைத் தன் சொந்த அநுபவத்தே, உள்ளூர உணரும் தன்மைக்கு—பக்குவ நிலைக்கு—அப்பெண்கொடி வந்துற்றாள்—என்பதே யன்றோ? **காதல் தாகம்.**—கடவுள் அருளிய வரன். அது அவரது கிருபா விலாஸம்—கடாக்ஷம். காதல் தாகத்தினைப் பூர்த்தி செய்துகொள்ள முயல்வதில் விவாகம் பிராப்தமாகின்றது. பின்னர் ஸந்தான பாக்கியம் லபிக்கின்றது. படிப்படியாய் இன்னோரன்ன நலங்கள்—சுபங்கள் அடுத்தடுத்து ஒன்றின் பின்னொன்றாகத் தோன்றி, வாழ்க்கை விலாசமும், வன்மையும், ஜனக்கட்டும், காந்தியும் பெற்றதாகிப் பரிமளித்திடுகின்றது. அன்பனான என் நாதன் பிரிந்த போதே என்னாவி போய்விட்டது. என்னன்பன் நீங்கிய போதே ஆசையும் அலங்காரமும் போய்விட்டன. கொண்டவன் குலைந்தபோதே என் கொண்டையும் குலைந்தது. உயிர் போய் உடலிருப்பதினால் பயனென்ன? என்னை விட்டு ஒரு நாளும் பிரியாத கணவனோடென்னையும் சேர்ப்பிக்கவேண்டுமென்பதே எனது நித்ய பிரார்த்தனை.”

**கனகவல்லி.**—“என்னுயிரக்கா! கணவனார்தம் பெருமையை என்னைவிட நீ நன்கு அறிந்திருக்கிறாய். பரஸ்பரம் பிரிதல்—என்பது வஸ்துவின் அருமையை அதிகமாக எடுத்துக் காட்டுகின்றது. ஜெகநாத நாயுடுவின் மீது எனக்குள்ள வெறுப்பு சொல்லுந்தரத்தினதன்று. அதன் காரணமும் உனக்குப் பிறகு தெரியவரும். ஆடவரின் ஹஸ்தம் படாத வரையில், ஒரு பெண்மணியின் ரூபலாவண்யங்கட்கும், யௌவனத்தின் உறுதிக்கும் எத்துணை ஆண்டுகளாயினும் பழுது, தளர்ச்சி, மெலிவு நேராது. யுவகுமாரியாம் பாரிஜாத மலரினை ஆடவனொருவன் முகர்ந்து, நோக்கி, ஸ்பரிசித்து, மனோரம்யப்பட முயன்ற தினமுதற் கொண்டே, அந்த ரமணீயமான புஷ்பத்தின் யௌவன விலாஸம், காந்தி, மேல், மினுமினுப்பு—வரவரக் குறைய ஆரம்பித்து, பின், புத்தி

ரோற்பத்தி யுண்டானதும், அந்த சுகுமாரமான மலர் தன் உறுதி கெட்டு, வாட்டமுற்று, யௌவன வன்மையும் தளர்ந்து, உலர்ந்து, வதங்கி, தனது வசீகர ஜோதியை—பிறர் மனத்தை ஊடுருவிச் சென்று தாக்கிக் கவரும் சக்தியை—இழந்தொழிகின்றது. காண்பதற்கே மனம் பிடிப்பதில்லை.''

லக்ஷ்மீகாந்தம்.—''உன் பதியின் மீது உனக்கேன் இத்துணைத் துவேஷம்? ஸ்திரீகளுக்குப் புருஷனைவிடத் தெய்வம் வேறில்லை, விரதமில்லை, நோன்பில்லை, கோவில்குளமில்லை, மஞ்சளில்லை, மாலையில்லை, வாசனையில்லை; ஆடையாபரண முதலிய சிறப்பும் அவ்வுத்தமக் கணவனார் கண்டு களித்தற் பொருட்டேயன்றி வேறெதற்குமன்று. என்றும், எப்பொழுதும் காரிகையார் தம் நன்கணவன் மனங் கவரும்படி நடப்பாரல்லர். ஒரு பெண் கொடி, முன்பே மானிடவர்க்குப் பேச்சுப் படாமலிருந்தால்—ஒருவர்க்கு மனைவி என்று ஆகாமலிருந்தால் ஒரு வகையாய் சரியென்னலாம். அப்போது அப்பெண்கொடி தன் இஷ்டப்படி நடக்கலாம். அதுவும் இக்காலத்து அறமன்று. பெண்களின் பாதுகாப்புக்கு விவாகம் முக்கியம். திருமணம் நடந்தேறியபின்னர், அகமடியானுக்கு (வீட்டுக்காரனுக்கு) அகத்தை (ஆத்மாவை)க்கொடாவிடினும், அங்கம் (தேகம்) அவனுக்கே உரியதாகையால், அதை அவனுக்கே தந்துவிட வேண்டியதே. மேலுக்கு வேஷம், உள்ளே த்வேஷம். இப்படியானால் எங்ஙனம் ஜீவனம்? கணவனோடு நாள் கடலைக் கழிப்பது எவ்வாறு? அங்குமிங்கும் (இகலோகத்திலும் பரலோகத்திலும்) வாழப் பிறந்தவர்களன்றோ நாம்? இவ்வண்ணம் மனதில் வைத்து உனக்கு மனங்குளிர மனமில்லையாகில் அது கற்புலக்ஷண மன்றாம்.—''ஓரடி விடில். ஓரடி யகலும், ஆகையால் ஓரடி யணுக ஓரடி பிடி.''

கனகவல்லி:—''அதென்ன அக்கா! ஓரடி யணுக—ஓரடி பிடி?

லக்ஷ்மீகாந்தம் :—அது ஒரு பரமஹம்ஸரின் திருவாக்கியம். அமிர்த கலசங்களால் அலங்கரிக்கப் பெற்று வசீகரப் பிரபையோ

மே் ஜொலிக்கும் நினது மார்பகத்தே உன் பிராணபதியின் நெஞ்சமும் ஒன்றோடொன்று நெருங்கிப் பொருந்தி, இடையிற் காற்றுலாவுதற்கும் இயலாவண்ணம் ஒரு தேகமாய்த் தோன்றி, ஒன்றுபட்டு நிற்கவேண்டுமென்பதே அதன் பொருளமைதி—கருத்து. இங்ஙனே பொருந்துதலி னின்றும் நீ ஓரடி விடில், உன் மார்பகத்தே பிரேமையோடும் பொருந்தி நிற்கும் உன் பதியாகிய அந்த ஓரடியும் உன்னிலிருந்தும் தூர அகலும். அதனால் வாழ்க்கை நலமனைத்தும் பாழ்பட நேரும். ஆகையால் ஓரடியை, அதாவது உன் பதியை அணுகுவதற்காக ஓரடி பிடி; அதாவது உன் பதியை உனக்கு என்றும் பொருந்தியவாறாகப் பிடித்துக் கொள். இதற்கு மட்டுமே யல்ல—இல்வாழ்க்கையில் நேரும் எல்லா விஷயங்கட்கும் இது பொருந்தும். எவ்வெக் காரியங்களிலும் உன் பதியின் அபிப்பிராயமே உன் அபிப்பிராயமாகக் கொள். எதினின்றேனும் நீ பொருந்தாது பிரிந்து ஓரடி விடில் ஓரடியகலும். அதனால் இல்லறம் குலையும். ஆகையால் ஓரடி யணுகுவதற்கு அந்த ஓரடி பிடி. இங்கு ஓரடி-என்பது ஓர் அடிக்கும் சொல்லலாம். உன் நெஞ்சமும் உன் பதியின் நெஞ்சமும் பொருந்தி ஒன்றையொன்று ஒட்டி ஒருமைப்பட்டபோது உன் பதி இருக்கும் இடத்தின் அளவு ஓர் அடியுள்ள இடமாகவே இருக்கும். ஆகவே இங்கு ஓரடி என்பது அந்த ஓரடிக்குள் தன் உடலைக் கிடத்தி நிற்கும் கணவனாரையும் குறிப்பிட்டுக் காட்டுதலாகவும் கொள்ளலாம். ஸதி பதிகளின் ஒற்றுமை சம்பந்தமாக இன்னும் எத்தனை விஷயங்கட்கு அந்தப் பரமஹம்ஸரின் வாக்கியத்தை வைத்துப் பார்த்தாலும்—அதற்கெல்லாம் அது பொருந்தி நிற்கும்.

கனகவல்லி:—"எனக்கேன் அக்கா இதையெல்லாம் சொல்லுகிறாய்?"

லக்ஷ்மீகாந்தம்:—"காரணமில்லாமலல்ல. உன் கணவனார் இருக்குமிடத்தில் நீ நிற்பதில்லையாம். அவர் ஆயிரந் தடவை தன்னருகில் உட்காரும்படி கூறினும் நீ வேண்டா வெறுப்பாக நிற்பது வழக்கமாம். அல்லது கடுகடுப்புடனும் அருகே அமர்வை

யாம். உலகத்தையே வெறுத் தொதுக்கிய வேதாந்தி போன்றும் பேசுவையாம். ஒரு நாள் ஏதாகினும் கடுகடுத்துக் கூறின் மூன்று நாள் வரை அதற்காக அவரோடு பேச மாட்டாயாம். பெண்கள் தமது நாயகர் தம்முடன் பேச நெருங்கினால்—ஆ! இவ்வளவுக்கு நாம் கொடுத்து வைத்தோமா—என்ன பாக்கியம் செய்திட்டோம் —என்று நினைத்துப் பெருமகிழ் வெய்துதலன்றோ கற்புறு மடவார்தம் ஒழுக்கமாகும். நீயோ மற்றவர்களுடன் எவ்வளவோ சந்தோஷமாகப் பேசுவையாம். வீட்டு ரகசியங்களையும் நிகழ்ச்சிகளையும் கூறுவையாம். உன் பர்த்தாவின் முன்பு பேசுவதானால், அது உனக்கு வெகு கசப்பாம். அப்படிப் பேசினும் சிடுசிடுத்த முகத்துடன் தானும். பேசவே உனக்கு மனம் வராதாம். பத்து வார்த்தைக்கு ஒரு வார்த்தை நீ பதில் சொல்வாயாம். உங்களுக்குள் பார்யா பர்த்தா அந்நியோன்னியமே யில்லையாம். என்னேரமும் முகத்தை—உம்—என்று தூங்குமூஞ்சிபோல் வைத்துக் கொண்டு கிடப்பாயாம். எனக்கு இவற்றையெல்லாம் தாயார் சொன்னார்கள். அது அறமன்று; சரியன்று. நமது யௌவன காந்தியின் உறுதியை இழத்தற்கு முன்னரே, பதியின் பிரேமையை அவருக்குத் திருப்தியானபடி யெல்லாம் இருந்து — நடந்து, நம்மை நன்கு சுவைத்துக்கொள்ள—அவரது ஆவல் தணியுமளவும்—அவரது மனம்போல்—அவரது பிரியப்படி—விட்டுவிட்டு—அதற்கெல்லாம் நாம் இஷ்டத்தோடும் உள் விருப்பத்தோடும் இடங்கொடுத்து நின்று — அவரது அன்புக்கு உரியவர்களாக நம்மை ஆக்கிக் கொள்ளவேண்டும். இந்த வழியிற் சென்றுதான் நாம் நமது கணவனுரை நம் வசப்படுத்துதல் வேண்டும். அப்பொழுதுதான் நமது யௌவன வன்மை வற்றித் தளர்ந்திட்ட நாளிலும், நம்மீது நம் பிராணபதி கொண்டுள்ள காதல்—பிரேமை —ஐக்கியம்—சலனப்படாமல் என்னும் பதினறுகப் பிரவகித்தோடா நிற்கும். இந்த விஷயத்தில் இணக்க மின்றி பதியின் விவாக ரம்யத்தைக் கெடுத்து விட்டு, மற்ற பயனிலா விஷயங்களில் அவருடன் ஒற்றுமைப்பட்டு நின்றால்—அது புத்திசாலித்தன

மாகாது. எனவே, தம் கணவன் முன்னர் நாணிக்கொண்டும், கோணிக் கொண்டும், அவரது மனோபீஷ்டத்திற்கு இணங் காமலும், — ஏதோ அவரது வற்புறுத்துதலுக்காகத்—தான்— மனவெறுப்புடன் இணங்குவது போன்றும், கணவனுக்கு அவன் வாழ்க்கையில் ஒரு அதிர்ப்தி தோன்றிவிடும்படி—ஏமாறும் படி—நடந்துக்கொண்டும்—இங்ஙனமாக — பயனுள்ள — (புத்திர பாக்கியத்திற் கேதுகரமான) அத்தவப் பொழுதை வீணே அவப் பொழுதாக்கிப் பாழ்படச்செய்து புருஷத் துரோகியாய் சண் டாளியாய், காதகியாய் மாறலாகாது. நம்மை நம்பிய கணவனுருக் கென்று பயன்படாத இத்தேகம் இருந்தென்ன போயென்ன?''

கனகவல்லி:—"ஜெகநாத நாயுடுவை நான் விரோதிக்குங் காரணம் நியாயமென்றே படுகிற ஒருநாளும் சீக்கிரத்தில் வந்து சேரும். அப்போது அதைக் கூறுகிறேன். என் மீது கோபம் ஸாதிக்க வேண்டாம். பதி பக்தியைக் குறித்து எனக்கும் சொந் தத்தில் கொஞ்சம் அநுபவமுண்டு. ஆடவர்களினும் அதிக அபேக்ஷை—தாகம்—உடையவர்களாக நம்மைக் காண்பித்துக் கொண்டு, நம் கணவரின் விருப்பத்தைக் குறிப்பாக உணர்ந்து அவர் பிரியத்திற்கு இசைந்து நின்று. அவருடைய காதல்தாகம் தணிந்து பெருகிட வைத்து, அதை எஞ்ஞான்றும் வற்றாத ஸமுத் திரமாக்கி, அதனால் நம் பதியின் உள்ளத்தைக் கவர்தல் வேண்டும். தங்களின் அபிப்பிராயமும் இப்படித்தானே. ஒரு ஆடவனுக்கு— அவனது பல்வகைத்தாய லோக கஷ்டங்களும், துயரங்களும்— அவனது மனத்தில் அவ்வளவாகத் தோன்றாதபடியும், அவனது வாழ்க்கையில் வெறுப்பு — தெவிட்டுதல் உண்டாகாதவாறும் செய்விப்பவள் அவன் பிரிய மனைவியே யாவாள். அவள் நடந்து கொள்ளும் விதத்தைப் பொறுத்துப் புருஷனது சுகபாக்கிய போகாதிகள் அமையும். எப்படியோ நானும் இரண்டு குழந்தை களுக்குத் தாயாகி விட்டேன் அக்கா!''

லக்ஷ்மீகாந்தம்:—"அப்படியா? ஸந்தோஷமே. கஷ்டமோ, லாபமோ, நஷ்டமோ, துயரமோ — எதுவாயினும் சரியே;

அவற்றை நாமும் நமது பதியுமாய் சமமாகப் பாகித்துக் கொள்ளக் கடவோம். நம்முடைய எத்தகைய ரகசியங்களையும்—அந்தரங் கங்களையும்—நமது பதியிடம் நாணமின்றித் தெரிவித்துக்கொள்ள நம்மால் முடியும்—கூடும். அவரிடத்தில் நமக்கு மறை பொருள் ஒன்றுமில்லை. நமது மானத்தையே அவருக்கு அர்ப்பணம் செய் திருக்கின்றோம். அது பகவத் ஆக்ஞை—பரம பிதாவின் கட் டளை—எல்லாப் பிராணிகட்கும் பொருந்திய இயற்கைப் பிரமா ணம்--விதி—அமைப்பு. ஸ்திரீ புமான்களிருவரது ஹிருதயங்களும் தேகமும் ஒன்றுபடுதற்கென்றே இந்த அமைப்பு—கூட்டுறவு— ஸம்ஸர்க்கம்—உலகு தோன்றிய நாள் முதலாக அதுவும் கூடவே உதித்தது போலும்!—'ஸதிபதிகளுக்குள் எத்தனை விரோதங் கள், கலகங்கள், பிரிவுகள் நேரினும்—அந்த ஒன்றுபடுகையின் பிரபாவமானது எல்லா மனஸ்தாபங்களையும் அவர்கள் மறந்து விடும்படி செய்விக்கிறது.

கனகவல்லி :—" நன்றாக எடுத்துச் சொல்லுகிறாய் அக்கா! நமது பதி ஆடவரின் வர்க்கத்தைச் சேர்ந்தவராயினும், நமக்கு அவர் ஒரு ஸ்திரீ வர்க்கத்தைச் சேர்ந்தவர் போல்தான்,—ஒரு பெண்ணைப் போலவே,—அவரை—நமது பதியை நாம் கருதலாம் —பாவிக்கலாம். ஒரு பெண்ணைப்போல் நமது விலகிய சேலையை அவர் தாராளமாய்ப் பிரியத்தோடு எடுத்து மூடவும் முடியும். ஸயன அறையிலிருந்தும் அவர் வெளிச் செல்லும் போது, நாம் ஆயாஸ மேலீட்டினால் இன்னும் உறங்கியவாறாகவே இருந்தால், நமது ஸயனத்தை ஒழுங்காக்கி, நமது ஆடை களைத் திருத்தி சரியாகச் செய்துவிட்டு, ஒரு அன்பு முத்தமும் நமக்கு அளப்பரிய காதலுடனும் தந்து, அப்பால் கதவைத் திறந்துகொண்டு அவர்—நமது பிரேம பதி—வெளியே போகும் காட்சியின் நிகழ்ச்சிகள் எவ்வளவோ தடவைகளில் நேரிட்டிருக்க லாம். ஒரு பெண் விதவையாய் விட்டனளென்று துக்கிப்பதெல் லாம் மேற்சொன்ன காட்சியின் நிகழ்ச்சிகள் அவளுக்கு இனி வாய்க்கப் போவதில்லையென்ற ஸஞ்சலத்தினாலேதானே? மேற்

சொன்ன அக்காதற் காட்சியின் நிகழ்ச்சிகள் இல்லையாகில் குடும்ப விர்த்தியேது, மகப்பேறு எது, தம்பதிகளுக்குள் ஒற்றுமை எது, கணவனுக்கு வீட்டு ஞாபகம் எது, மருமகள், மருமகன் வந்தமைவ தேது ஒன்றுமே யில்லை. ஒண்டி மரமாக நின்று ஒழிய வேண்டியதுதான். இனி நமது உயிர்த் தோழியும் நமது பிரேம பதியே யாவர். ஒரு தோழியினிடத்து ஸாதாரணமாக நாணம் விடுத்து போலி மரியாதைகளின்றி விளையாடுவது போலும், பேசுவதுபோலும் அவரிடமும் செய்யலாம். அவரது மடியின் மீது தலை வைத்து உறங்கலாம். அவரது மடியில் பஞ்ச வர்ணக்கிளிபோன்று உட்கார்ந்தும் கொள்ளலாம். நமக்கென்று அவருடன் அதிமனோரம்யமாய் ஸல்லாபிக்க ஒரு அந்தரங்கமான—ஏகாந்தமான அறையையும் கடவுள்—நமது பெரியோர்கள்—நமக்கு அருளி யிருக்கின்றனர்."

லக்ஷ்மீகாந்தம் :— "நமது பிரியமுள்ள பணியாளாகவும் நமது பதியைச் சொல்லலாம். நாமும் நமது குழந்தைகளும் க்ஷேமமாயிருக்க வேண்டுமென்றுதானே அவர் இந்த உலகத்தில் இவ்வளவு பாடும் படுகிறார். நமது குடும்பத்தை அவர் தமது குடும்பமாக நினைத்துக்கொள்கிறார். பத்து மாதமும் நொந்து சுமந்து பெற்ற நமது குழந்தைகளை, நமது பதி—தமது குழந்தைகளாக—தாமே வயிற்றில் தாங்கிப் பெற்றதாக எண்ணிக்கொள்கிறார். இன்னும் நமது தேகத்தைத் தமது சரீரமாக—தமதுசரீரத்திலும் மேலானதாகக் கருதி—அதற்கு ஆபரணாதிகள் அணிவித்து-தாமே அவற்றை யணிந்தின்புறுவது போன்று சிந்தை பூரித்து அழகுபார்த்துப் புளகாங்கிதமுறுகின்றார். என்ன பேதமை! என்ன விநோதம்! என்ன ஒற்றுமை! பகவானுடைய பரமஸக்திப் பிரபாவம்-இதில் தான்-தம்பதிகளின் அந்நியோந்யத்தில் தான்-அவ்விருவரானும் கலக்கப்படுகிற பனி யனைய சிறிய துளி, பெருகி யொரு ஆல ரூபம்ஆவதில் தான்—பிரகாஸமாகின்றது—ஜ்வலிக்கின்றது."

கனகவல்லி :— "என் அக்காடி! உன் பேச்சுகளெல்லாம் வெகுநாள் உலகத்தில் பழகிய கிழவி பேசுவதுபோல் இருக்கின்

றது. இவ்வளவு அன்பாக என்னோடு வெகு ஒற்றுமையுடன் பேசுகிறாயே அக்கா! நமது ஒற்றுமை எவ்வளவு தூரத்திற்கு? உன் பதி வந்தாரானால் அவரோடு நீ அவர் வீட்டுக்கு ஓடிப் போய் விடுவாய். இவ்வளவு தானே நமது ஒற்றுமை? என் பதி உன் மீது பிரியப் பட்டாரென்று வைத்துக்கொள்வோம். அதன் மேல் நான் உன்னை அழைத்தால் நீ என் பதியுடன் இருக்க இணங்குவையா? அல்லது என் மீது உனது பதி ஆசை கொண்டாரென்று வைத்துக்கொள்வோம். அதற்கு நானும் ஒப்பி அவரோடு இருக்க விரும்பும் பக்ஷத்தில், நீ குளிர்ந்த மனதுடனும் உன் பதியை எனக்குக் கொடுத்து விட்டு நீ கைகட்டிக்கொண்டு தூர நிற்பாயா? உன் மனப்பூர்வமாக நீ அதற்கு உட்படுவாயா?''

லக்ஷ்மீகாந்தம் :—“ தங்காய்! என்ன திடீரென்று இப்படிப் பேச ஆரம்பித்து விட்டாய். வாய்த்துடுக்கு உனக்கு அதிகமாக இருக்கிறதே. நீ பேசுவதை எவராவது கேட்பின் உன்னை எவ்வளவோ கேவலமாக நினைத்து விடுவார்களே!''

கனகவல்லி :—“ பிறருடைய கேவலம் என்னை என்ன செய்யும்? என்னைப் படைப்பித்த கடவுளுக்கு எது நியாயமென்று படுகிறதோ அந்த வழியில் நான் செல்லும்போது, உலகத்து நிந்தனைகளில் நான் என் கவனம் செலுத்தவேண்டும்? எனது மங்களத்தைக் கோரியே மேற்கண்டபடி உன் அபிப்பிராயம் தெரிந்து கொள்ளக் கேட்டதே யல்லாமல், வாய்த்துடுக்கு இதில் ஒன்றுமில்லை யக்கா. தன்னைப் பெற்ற தாய்க்குக் கூடத் தெரிவிக்க முடியாத தனது புருஷனின் அந்தரங்கச்செய்திகள், ரகசியங்கள், ஸல்லாப மர்மங்கள் ஒவ்வொரு பெண்ணினிடத்தும் எவ்வளவோ இருக்கும்—இருந்திடவே செய்யும். என் தாய்க்கு இன்னும் சொல்லாமல் நான் மறைத்து வைத்துள்ள புருஷ ரகசியங்களும் இல்லாமற் போகவில்லை. அதைச் சொல்லித் தொலைக்கவும் இன்னும் காலம் வரவில்லை. என் செய்வது?''

லக்ஷ்மீகாந்தம் :—“ ஏன் இவ்வளவு வருத்தப்படுகிறாய் கனகவல்லி? கண்களில் ஜலம் வருகிறதே!''

கனகவல்லி :—"அருமை யக்கா, நீ இழந்துபோன உன் சொத்தை—உன் பிராணபதியை நான் எவ்விதத்திலேனும் கண்டு பிடித்துத் தந்தால் எனக்கென்ன வெகுமதி செய்வாய் ?"

லக்ஷ்மீகாந்தம் :—"தங்காய் ! நீ விவாகமில்லாத பெண்ணாக இருந்திருந்தால் அவரையே உனக்கும் நாயகராக்கி இருவரும் ஒரே இடத்திலிருந்து இந்தப் பக்கம் நானும், அந்தப் பக்கம் நீயும் நடுவே என் பிரேமபதியுமாக சயனித்து இணைபிரியாது இன் புற்றிருக்கலாம். வீணாசைப் படுவதில் காரியமில்லை. என் கணவனை யடைந்து நான் மகிழ்வதிலும் உனக்கு வேறு என்ன மகிழ்ச்சி—வெகுமதி இருக்கப் போகின்றது ?"

கனகவல்லி :—"நான் அணிந்திருக்கும் ஆபாணங்களை நன் ருகக் கவனித்துப் பார்"—என்று கூறி, தனது நகைப்பெட்டி யையும் திறந்து தனது ஆபரணங்க ளனைத்தையும் காண்பித்தாள்.

லக்ஷ்மீகாந்தம் :—(திகைத்தவளாய்) "என்ன ஆச்சரியம் ! நான் விஜயநாதனிடம் கொள்ளை கொடுத்துவிட்ட என்னுடைய ஆபரணங்களாக வல்லவோ அனைத்தும் இருக்கின்றன. இதென்ன மாயம் ! இந்த நகைகள் உன்னிடம் சேர்ந்ததெப்படி ? (என்றாள்.)

கனகவல்லி :—" என் விவாகத்தின்போது பன்னீராயிர ரூபாய் பெறுமான இந்த நகைகள் எனக்கு வரிசையாகக் கொடுக் கப்பட்டன. என் பர்த்தாவின் தோழனே விஜயநாதன். அவன் மூலமாக என் பர்த்தாவுக்கு இந்த நகைகள் கிடைத்து எனக்குக் கொடுத்திருக்கலாம். மணியக்காரத் தெருவுக்கு வா, அங்கொரு விசேஷத்தைக் காண்பிக்கிறேன்."

லக்ஷ்மீகாந்தம் :—"என்ன விசேஷம் காண்பிக்கப் போகி ருய்? அதை இங்கு தானே சொல்லிவிடு. உனக்கு என் இவ்வளவு சந்தோஷமும் சிரிப்பும் பொங்குகிறது? உனக்குச் சிரிப்பு, எனக்கு வயிற்றெரிச்சல் !"

கனகவல்லி லக்ஷ்மீகாந்தத்தை வற்புறுத்தி யழைத்துக் கொண்டு மணியக்காரத் தெருவிலுள்ள தனது வீட்டிற்குச் சென் றாள். அங்கு தனது அந்தரங்க ரகசிய மொன்றைக் கூறி அழுது

அதைத் தன் தாயாருக்குக் கூடத் தெரிவியாமல் மறைத்து வைத்திருப்பதாகப் புகன்றாள். லக்ஷ்மீகாந்தம் அதன் காரணம் கேட்டாள். அதற்குக் கனகவல்லி அது ஒரு பெரும் பாரதமென்றும் பிறகு சாவதானமாகச் சொல்வதாகவும் தெரிவித்தாள். அதற்குள்ளாக, அந்தரங்கமான அறையொன்றினுள்ளிருந்து ஒரு புருஷன் லக்ஷ்மீகாந்தத்தின் குரலைக் கேட்டு ஆசையோடும் அந்த அறையை விட்டு வெளியில் வர, அவரைக் கண்டதும் லக்ஷ்மீகாந்தம் கதறியபடியே ஆ! நாதா! என்று அவரைத் தழுவிக்கொண்டு கண்ணீர் வடித்தாள். அவரும் பிரலாபம் நிறைந்தவரானார். இருவரையும் ஒன்றுசோ விட்டுக் கனகவல்லி மிக்கப் பூரிப்புடனும்—நீங்கள் சவுக்கியமாயிருங்கள் என்று கூறி ஒரு திரையின் மறைவில் போய் நின்றாள். இருவரும் அங்கு வந்து கனகவல்லியைப் பிடித்து இழுத்து வந்து தம்மருகே வைத்துக்கொண்டனர். அறையிலிருந்தும் வந்தவர் லக்ஷ்மீகாந்தத்தின் கணவனை குலசேகரன் என்று நாம் கூறவேண்டியதில்லை. பிரிந்த ஸதிபதிகள் இருவரும் தத்தம் பரிதாப சரித்திரங்களை ஒருவருக்கொருவர் வெகு விஸ்தாரமாகத் தெரிவித்துக் கொண்டனர். அழுவதும் சிரிப்பதும் ஏங்குவதுமாக இருந்தனர். அவர்களின் ஆநந்தத்திற்குக் கேட்பானேன்?

வேணுகோபால் நாயுடு தமது மாளிகையின்மேல் ரங்கபாஷியம், பிரேமநாதன், ஜனகலக்ஷ்மி இவர்கள் சூழ உட்கார்ந்து பிரேமநாதனின் விவாகத்திற்கான ஏற்பாடுகளை யோசித்துக்கொண்டிருந்தார். அந்த சமயம் குலசேகரனும் லக்ஷ்மீகாந்தமும் கனகவல்லியுமாக அங்கு வந்து அனைவரையும் நமஸ்கரித்தனர். வேணுகோபால்நாயுடு குலசேகரனை வாரி எடுத்து ஹா! குலசேகரா நீயா! வந்தனையா? எங்களுடைய சந்தோஷத்திற்கு இந்த ஒரு பதார்த்தம் தான் குறைவாக இருந்தது. அதையும் கடவுள் அருள்புரிந்து விட்டார் என்று கூறி ஆநந்தக் கண்ணீர் சொறிந்தார். குழந்தாய்! லக்ஷ்மீகாந்தம்! உன் பெரிய மனக்கவலை பகவத்கிருபையால் நிவர்த்தி பெற்றுவிட்டது. நேற்று தான் ரங்க

பாஷியத்தின் விடுதலையையும், நான் வெகு வருஷங்களாகக் காணுதவர்களையும் கண்டு களித்தேன். இன்று உனது ஆநந்த மயமான வாழ்க்கையை நோக்கிச் சித்தம் பூரிக்கின்றேன். இருவரும் மங்களமாக வாழி என்று வாழ்த்தினர். கனகவல்லி இந்த சந்தோஷத்தோடும் வாழ்த்துதலோடும் தன்னையும் சேர்த்துக் கொள்ளவேண்டுமென்று கூறி, ஒரு முக்கியமான ரகசிய பாகத்தையும் தனது பிதாவுக்கு விவரித்தாள். அதைக் கேட்டதும் வேணுகோபால் நாயுடுவுக்கும் மற்றவர்களுக்கும் உண்டான ஆச்சரியம்,—இவ்வள வவ்வளவன்று. இதற்குள் தனலக்ஷ்மி விஷயம் தெரிந்து ஓடிவந்து குலசேகரனை இருகரங்களாலும் தழுவிக்கொண்டு, எப்படியப்பா! என்னை விட்டுப் பிரிந்து சென்ருய் என்று வினவி சந்தோஷம் பொறுக்கமாட்டாமல் நின்ருள். ரங்கபாஷியம் குலசேகரனைப் பார்த்து நீ இவ்வளவு கஷ்டப்பட வேண்டுமென்று பிராப்தமும் இருந்ததா என்று துக்கித்தார். பிரேமநாதன் தனது தமக்கையின் பதியைக் கண்டு சாஷ்டாங்கமாய் அவர் பாதங்களில் வீழ்ந்து நமஸ்கரித்தான். உடனே லக்ஷ்மீகாந்தம் எனக்கு மட்டும் நமஸ்காரம் கிடையாதாவென்று கோபித்துக்கொள்ள, ஆகா! அப்படியே என்று லக்ஷ்மீகாந்தத்திற்கும் நமஸ்காரம் செய்தான். அதற்கு லக்ஷ்மீகாந்தம் சிரிப்புடனும் நின்ருள்.

கனகவல்லி தெரிவித்த முக்கிய செய்தியானது எல்லோரையும்விட, தனலக்ஷ்மிக்கே அதிகமான ஆநந்தத்தைக்கொடுத்தது. இது சம்பந்தமாகத்தனியே சாவகாசமாக வெளியில் பிரஸ்தாபித்துக்காள்ளலாமென்றும் அதுவரையில் அந்தரங்கமாகவே இருக்க வேண்டுமென்றும் வேணுகோபால் நாயுடு கூறினர். குலசேகரனுக்கும்லக்ஷ்மீகாந்தத்துக்கும்ஏற்பட்ட "காதலர்சோதனை" தெய்வ கிருபையால் தீரப்பெற்று அவ்விருவரும் ஆனந்த வாரிதியி லாழ்ந்தினர். அடுத்த நாள் நல்ல சுபதினமாக இருந்தமையின், லக்ஷ்மீ காந்தத்திற்கும் குலசேகரனுக்கும் — விவாகத்தின் பிரதான— முக்கிய பாகமான—சாந்தி முகூர்த்தத்தையும் இனிது நிறைவேற்றினர்.—பிரேமநாதனின் விவாகத்திற்கு முன்னதாக இந்த சோபன

மங்களமும் வைபவமுமாக நடந்தேறிற்று. காதல்தாகமும் தணிந்து ஸதிபதிகளிருவரும் மனோரம்மிய மெய்தினர். கனகவல்லியும் இந்த சந்தோஷத்தில் பங்கு பெறுவதானாள். இதுவரையில் இருந்ததுபோல் லக்ஷ்மிகாந்தம் இனி தனியே உறங்க முடியாதென்பதை நாம் சொல்லவும் வேண்டுமோ? காதற் கடவுள் வாழி.

“காதலிருவர் கருத்தொக்க
ஆதரவு பட்டதே இன்பம்.”

---

# அத்தியாயம்—17

## மூவரின் முடிவு

இதுவரையில் நாம் விவரித்த அவ்வளவும் இன்பமே. இதற்குப் பின் அடுத்துவரும் விஷயத்தையும் நம் நேயர்கள் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். பிரேமநாதனின் விவாக காலத்தில் கனகவல்லி மஞ்சள் குங்குமத்தோடும் நிற்பதற்குக் கொடுத்துவைக்கவில்லை. ஸ்ரீரங்கம் தாமோதரம் ஐயங்காரை மூக்குப்பொடியில் மூளையை யுருக வைக்கும் திராவகத்தைக் கலந்து கொடுத்த குற்றம் ஜெகநாத நாயுடுவின்மீது நன்றாக ருசுவாகி, அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுப் போயிற்று. ஆனால் அத்தண்டனையை ஏற்பதற்கு முன்னர் மார்பு அடைத்து ஜெகநாத நாயுடு திடீரென்று இறந்துபோனார். எவ்வளவோ பண ஆசை பிடித்து நின்ற அவர் கதை இவ்வாறாக முடிந்தது. அவர் ஆயிரந்தான் இம்ஸைகள் செய்தவராயினும் கனகவல்லியிடத்து அவர் மிக்க அன்புடனும் பக்தியுடனும் நடந்துகொண்டாரென்பதை நாம் இங்கு அழுத்தமாக வற்புறுத்திக் கூறவேண்டிய பாகம். இறந்து

போனவர்களைப் பற்றி சிலாக்கியமாகக் கூறுவது உலக வழக்கமாயினும், நாம் அதைத் தழுவி இதனை உரைக்க வந்தோமில்லை. எத்தகையோருக்கும் சில வேளைகளில் புத்தி கெட்டுப் போவது இயல்பு தான். எத்துணையோ சாந்தகுண ஜந்துவான யானைக்கு மன்றோ மதம் பிடித்துப் போகின்றது. கனகவல்லி அவருக்காக மனப்பூர்வகமாகக் கண்கலங்கிப் பிரலாபித்தாள். என்ன செய்யலாம். அவர் பிறந்தது ஒரு ஊர், இறந்தது ஒரு ஊர்! பிறந்த இடத்திலேயே இறக்கும் பாக்கியம் எல்லா மனிதர்களுக்கும் கிடைப்பதில்லை.

இனி ஸ்ரீநிவாஸப்பிள்ளையின் கதி யென்ன? துஷ்டர்களின் கூட்டுறவு கடைசியில் துர்க் கதிக்கு தான் வழிதேடி வைக்கும். அவர் ஆஸ்பத்திரி சேவகனின் மனைவியைக் கொன்ற குற்றத்திற்காக மரணதண்டனையே பெற்றார். அவரது கொள்ளைக் கூட்டத்தினரும்,—ஒருவர்கூட விடாதபடி தண்டனை கிடைக்கும் படியாக ஸஞ்சீவபாபு வழிதேடிவிட்டாராதலின்,—அவர்கள் அனைவரும் சிக்ஷிக்கப்பட்டு காராக்கிருக வாஸத்திற்குச் செல்வதாயினர்.

கடைசியாக, விஜயநாதனின் அந்தியகாலம் நெருங்கிற்று. அவன் நோயலைக் கொன்ற குற்றத்துக்கு மரணதண்டனை விதிக்கப்பெற்றமையால், அவன் மீது எற்பட்ட மற்ற கேஸ்களை யெல்லாம் விசாரிக்காது மன்னித்து விட்டனர். மரணதண்டனைக்கு மேற்பட்ட சிக்ஷை வேறு யாதுளது?

ஜெகநாத நாயுடு அரஸ்ட் செய்யப்பட்ட பின்பு, விஜயநாதனின் ஸக்தி ஒடுங்கிவிட்ட தென்னலாம். பக்கத்தி லிருப்பவர்களின் தூண்டுதலினுல் தான் உலகத்தில் மனிதன் நன்றோ தீதோ எதையும் ஊக்கமாகச் செய்யத் தலைப்படுகிறான். உலகத்தில் ஒருவன் உற்சாக பூரிதனாய்த் தோன்றுவதெல்லாம்—அவனுக்குப் பிரீதியாக உள்ளவர்கள் அவன் அருகே யிருந்துகொண்டு—வீட்டில் நிறைந்தவர்களாகத் தோன்றச் செய்துகொண் டிருப்பதனால் தான். அந்தப் பலருடைய ஸக்தியானது இந்த ஒருவனின் மீது ஆவிர்ப்பவித்து—அதனால் அந்தப் பலரது பலத்தையும் இவன்

பெற்றவனுகி, தைரியமாய் உலகத்தில் ஓடியாடித் திரிந்து எவ்வித கஷ்டங்களையும் சோதனைகளையும் தாங்க ஸக்திவந்தனுகின்முன். அவனுக்கு வேண்டியவர்கள்,—யாரால் தன் வீடு நிறைந்திருக்கிற தென்று இவன் கருதிக்கொண் டிருக்கிருனே அவர்கள்,—வெளி யிடங்களுக்குப் போயிருந்தால், அவர்களின் பிரிவு சகியாதவனுய், அப்போது காலியாய் விட்டதுபோல் தன் முன்பாகத் தோற்று கிற வீட்டினிலே உற்சாக மற்றவனுய், முன் ஸக்தி அவ்வளவும் குன்றி மனதொடிந்த நிலையினனுய்த் தோற்றுகின்முன். ஆகவே உலகத்தில் ஒருவனுக்கு ஏற்படுகிற உற்சாகம்—பூரிப்பு,—ஊக்கம்—சக்தி—யாவும் அவனைச் சேர்ந்தோரின்—அவனுக்குப் பிராண பதமானவர்களின் வசீகர சக்தியால் அவனுக்கு உண்டாக்குவிக் கப் படுகிறதென்றும் நாம் ஊகிக்கலாம். இப்படியே விஜயநாத னின் சங்கதியும் இறுதியில்—ஜகநாத நாயுடுவின் ஸக்தியால்—என்று சொல்லும்படியாக முடிந்துபோயிற்று.

விஜயநாதன் தனது அந்தியகாலத்தில் தனது பிரிய மனை வியை வெகு விஸ்வாசத்துடனும் நேசித்தான். இது சில புருஷர் களின் துற்குணம். கால முழுமைக்கும் தமது மனைவியைச் சித் திரவதை செய்கிறது. தாம் உயிர்விடும் சமயத்தில் மட்டும் கண் ணே! கண்ணே! என்கிறது. இதில் விஜயநாதனும் ஒருவன்.

தான் ஆதியில் ஜனகலக்ஷ்மியிடம், அவள் சிறு பெண்ணு யிருந்தபோதே மிக்க மோஹமுற்றதாகவும், அவளை அடைவதற்கு மனதார விரும்பியதாகவும், தான் நேசிக்க நினைத்த பெண்ணை ரங்கபாஷியம் விவாகம் செய்துகொண்டதால், அந்த நிமிஷமுதல் அவருக்குத் தான் சத்துருவாகிக் கடைசி வரையும், அவரையும் அவ ரைச்சேர்ந்த குடும்பங்களையும் கெடுத்துக் குலநாசம் செய்ய சபதம் புரிந்து கொண்டதாயும் தன் மனைவிக்குக் கூறினன். அதனு லேயே, தான் தூண்டப்பட்டு ரங்கபாஷியத்தை மிகவும் நேசிப் பதுபோல் காண்பித்து, வேணுகோபால் நாயுடுவின் குடும்ப விஷ யங்கள், அவர் எழுதிவைத்துள்ள உயில் (முதலாவது உயில்)பத் திரம் யாவும் தெரிந்துகொண்டு; அக்குடும்பத்தைச் சீர்குலைய

வைப்பதற்காகவே தான் லக்ஷ்மீகாந்தத்தினிடம் பறித்த 12-ஆயிரம் ரூபாய் பெறுமான நகைகளையும் தனலக்ஷ்மிக்குக் காண்பித்து, அந்த அம்மையை மயக்கி, கனகவல்லியை ஜெகநாத நாயுடுக்கு விவாகம் செய்வித்ததாகவும், இந்த விவாகத்தின் நோக்கம் முதலாவது உயில் பத்திரத்தின் ஆதாரவைக்கொண்டு, வேணுகோபால் நாயுடுவின் ஸர்வ சொத்துக்களையும் கொள்ளையிட வேண்டுமென்பதே யென்றும் தனது மனைவியிடம் கூறினான்.

தான் இச்சித்த பெண்ணை மணந்து கொண்டதற்குப் பழிக்குப் பழியாக ரங்கபாஷியத்துக்குத் தூக்கு தண்டனை கிடைக்கும்படி தான் எவ்வளவோ அற்புதமாய்க் கேஸை ஜோடினை செய்ததாயும், கடைசியில் வீணாய்விட்டதென்றும் மனது துடித்தான்.

எனக்கு ஜனகலக்ஷ்மியைக் கொடுத்திருந்தால் ரங்கபாஷியத்தின் மீது நான் எவ்வளவோ பிரியம் வைத்து நடந்துகொண்டிருப்பேன். ஐயோ! பிராப்தமில்லாமற் போயிற்று!

“குயிற் குரல் மாதின் மயற்பட நேர்ந்து
உயிர்த்துணை நேயன் உயிர் பகையானேன்”

என்று புலம்பினான். இறுதியில் ரங்கபாஷியமும் அழுத கண்களுடனும் அவனைக் கிட்டினார். விஜயநாதன் அவரது கைகளைப் பிடித்து தனது மடியில் வைத்துக்கொண்டு பின் வருமாறு கூறினான்.

என் அன்பனே! நேசமே! பிரேம வாரிதியே! என்னை மன்னிப்பாயாக. என்னை நீ முற்றிலும் நம்பிவிட்டாய். நேசப் பைத்தியம் உனக்கு அதிகம். எவரைக் கண்டபோதிலும்—அவர்கள் நமக்கு நேசர்களாகக் கூடுமா—என்று கோருவது உன் சுபாவம்—பிறவிக் குணம். என்னை ஆதியில் நீ நேசித்துவிட்டு, நான் உன்னைப் பிரிந்து வேற்றூர் செல்லும் தருணம்—அப்பிரிவாற்றாமையைச் சகிக்க முடியாமல் தாரை தாரையாய்க் கண்ணீர்விட்டாய். என்னைக் காணும்போதெல்லாம் பரவசத்துடனும் வந்து

தழுவிக் கொள்வாய். இராப்பொழுதில் என்னருகே பிரிய காதலி போன்றும் ஸயனித்து விடிய விடியப் பேசுவாய். விடிந்து விட்டதே—கோழி கூவுகின்றதே என வருந்துவாய். காலமுழுதும் என் இஷ்டப்படி யெல்லாம் நடந்துகொண்டாய். கடைசியில் என் வேண்டுகோளின்படி பெண்வேடமும் புனைந்தாய். நான் உன் விஷயமாய்ச் செய்த அநீதங்கள் அவ்வளவும் வெளிவந்த பின் புங்கூட, நான் இப்போது பார்க்க விரும்பிச் சொல்லி யனுப்ப, ஒரு வேலைக்காரன்போல் தக்ஷணமே இச்சிறை கூடத்துக்கு ஒடி வந்துவிட்டாய்.

என் அமிர்தமே! என் ஆசையே! என் பூஷணமே! நானும் உன் மீது ஆதியில் நேசம் வைத்து நட்பு விருக்ஷத்தை வளர்த்து வந்தவனே. பாலக்காட்டில் ஜெனகலக்ஷ்மியின் விஷயமாக நீ என்னை எதிர்த்ததி லிருந்தும், பின்பு அன்னவளையே நீ மனைவி யாக அடைந்ததி லிருந்துமே நான் உன் மீது பொறாமை, விரோ தம் கொள்ளலானேன். இவை யாவும் எனக்கே இறுதியில் தீங் காக முடிந்து இச்சிறை வாசத்திற்கு என்னை உட்படுத்திவிட்டன. நன்மனத்தினர்களுக்கும், காலமுழுதும் தனக்கு அன்னமிட்டவர் களுக்கும், அபாய காலத்தில் உதவினவர்களுக்கும், தன்னை நம் பின நேசர்களுக்கும் துரோகம் செய்பவர்கள்—செய்ய நினைப்ப வர்கள்—என் கதியைக் கண்டு திருந்துவார்களாக.

என் பிரியமே! நான் விஷத்தை யுண்டுவிட்டேன். இனி வெகு நேரம் உன்னுடன் பேசிக்கொண்டிரேன். எனது அந்திய காலத்து வார்த்தைகளாக நான் இப்போது சொல்வதை நீ உல கத்துக்கு அறிவிக்கவேண்டும். உன் மனதிலும் நன்கு பதிய வைத்துக்கொள்.

உண்மையான நேசத்துக்கு மரியாதை வேண்டியதில்லை. பிராணபதமான நேசத்தில் வாடா—போடா என்பதான பதங்கள் எத்துணையோ உருக்கமும் பரிசமும் உள்ளனவாய்,—ஒரு தாயார் தன் ஏக புத்திரனை அடா மகனே! என்று அழைப்பதில் அங்கு அந்த அடா என்ற பதம் எத்துணைப் பிரேமபூரிதமாய் ஒளிர்கின்ற

தோ அதனினும் மேம்மட்டதான சிறப்பு நலம் உடைத்தான தாய்,—ஒளிரும். இந்த விதமான நேசத்திற்கு முடிவு காலம் ஒரு போதும் கிடையாது. அவ்விதமான நேசம் இப்பூவுலகில் மிகவும் அருமை. அது அதற்கென்றே பாக்கியம் செய்தார்க்குத் தான் கிடைக்கும். அவர்கள் தான் ஒருவருக்காக ஒருவர் பிராணனை விடவும் தயாராக நிற்பார்கள். ஒரு ஸ்திரீ தன் கணவன் என்ற பதி பக்தியால், அவனிடத்து ஒன்றுபடுதலாகி, தனது நாணத்தை எவ்விதம் நழுவவிட்டு விடுகின்றுளோ—அவ்விதமே அந்த ஆப்த மித்திராரத்தினங்களும் தமது நேசப்பெருக்கால் லோக கௌர வமான மரியாதைகளைத் தங்களுக்குள் வழங்கிக்கொள்ள மறந்து கைநழுவவிட்டு விடுகிறுர்கள். 'வெளிக்கு அந்த ஸ்திரீ மற்றவர் முன்பு தன் பதியின் கை தன்மேல் படக்கூடக் கூச்சமுற்று தூரத்தில் நின்று மரியாதை காண்பிப்பது போல், இந்தப் பிராண பதமான நேசர்களும், வெளி யுலகத்தின் திருப்திக்காகப் போலியாக மரியாதைகளைத் தங்களுக்குள் வழங்கிக் கொள்வர்.

இவ்விதமான நேசம், சுயநலமே முற்றிப்பழுத்த இக் காலத்தில் வெகு அருமை. நம்மிடம் நேசம் பாராட்டுபவர்களெல் லாம் ஏதோ ஒரு காரணார்த்தமாகவே தான் நேசிப்பார்கள். தங் களுக்கு ஏதோ நம்மால் காரியம் ஆகவேண்டி யிருந்து அதற் காகவே நேசிப்பதாய் இருக்கும். ஒருவரை நேசனுக மதித்து அவரை நம் வீட்டிற்கு அழைத்து ஆயிரம் உபசரணைகள் செய்திடினும், நமக்கு அவர்களிடத்தில் அளவு கடந்த பிரேமை பிரவகித்தோடினும், நம்மைப் போலவே அவர்களும் இருப்பரென்பது வாய்ப் பேச்சிலும் கடிதங்களிலும் காண லாமே யன்றி, அவர்களுடைய நடவடிக்கைகளில் காண முடியாததாகவே நமது தலைவிதி வர்த்தமையும். சிலர் நேசக் கடிதங்கள் எழுதும் பரீக்ஷையில் தேறி, அக்கடிதங்களைக் கொண்டு எவர் மனத்தையும் உருகவைத்து விடுவர். நேசமெனும் பாசக் கடலிற் சிக்கிக் கரைகாணுது அலையும் மனத்தினரைப் போன்று நடிப்பர். ஆயினும் உற்று ஆராயப்புகின் ஏதோ ஒரு காரணார்த்த

மாக, தங்களின் சுயநலச் சிந்தையை நிறைவேற்றிக்கொள்ள நேசத்தின் துணையை நாடுவோர்களாகவே இருக்கக் காணலாம்.

இனி நேசர்களை நம்பி கைப்பொருளை இழந்து மோசம் போனவர்களும் எண்ணிலர். நேசமென்று நம்பி உடன்கையெழுத்துப் போட்டவர்களும், ஜாமீன் கொடுத்தவர்களும், அதனால் தங்கள் தலையில் கை வைத்துக்கொண்டு புலம்பினவர்களும் அநேகர். விபசாரம், குடி, வரவுக்கு மீறிய செலவுகள் இவை போன்றவையெல்லாம் சகவாச தோஷத்தாலேயே உண்டாகின்றன.

இன்னும் நெடுகச் சொல்லலாம். எனக்கு ஸக்தியில்லை. நான் உண்டுவிட்ட விஷம் தன்வேலையைச்செய்ய ஆரம்பித்துவிட்டது. பின் வரும் விஷயங்களை நீ மனப்பாடமாகச் செய்துகொள்.

(1) எல்லோரிடத்திலும் விஸ்வாச முள்ளவனாயிரு. எல்லோருக்கும் நல்லவிதமாக நடந்துகொள். ஆனால் எவரையுமே நீ நம்பாதே. வஞ்சக உலகம் இது.

(2) பரஸ்பரம் முகத்தைக்கூடப் பாராமலே காகிதங்களின் மூலம் எற்பட்டுவிடுகிற நேசங்கள் உண்டு. அந்த நேசத்தில் நீ பூரணமான பற்று வைப்பதற்கு முன்னர் அந்த நேசனை நீ நேரில் ஒரு முறை சந்தித்துக்கொள். முதல் சந்திப்பில் அவனைப் பற்றி உன் மனதில் என்ன படுகிறதோ அதுதான் கடைசி வரைக்கும். சந்தித்த பிறகுங்கூட வெகுநாள் வரைக்கும் அவனிடத்தில் நீ எச்சரிக்கையா யிரு.

(3) உனக்காக உயிர்விடக்கூடியவனாயிருக்கிற நேசன் ஒருவன் தவிர, மற்றவர்களை உன் வீட்டுப் பெண்களிடம் பேசவும் பழகவும் அவ்வளவு தூரத்துக்கு விட்டுக் கொடுத்துவிடாதே. நீ வீட்டில் இல்லாத காலங்களில் அவர்களுடைய ஸஞ்சாரம் உன் வீட்டில் இருக்கும் வண்ணம் இடம் தந்து கொள்ளாதே. அது வீண் பொல்லாப்புக்கு எதுகரம்.

(4) உண்மையான நேசம் உலகத்தில் இல்லை. மஹாத்மாக்கள் எங்கோ மலைக்குகைகளில் மறைந்து நிற்பதுபோல், உண்மையான நேசமும் எங்கோ பர்வதக் குகைகளில் உபயோகிப்பா

சின்றி மண்ணோடு மண்ணாய்க் கலந்து வெளிக்கு வாராமல் கிடக்கின்றது. ஆகவே நீ நேசிப்பதெல்லாம் போலி நட்புதான். ஆதலின் வெளிக்கு நேசம்போல் நீ காண்பித்துக்கொள். உன் உள்மனதுக்குள்ளாக அவர்களை அறிமுகஸ்தர்கள் என்ற பாவனையில் மதித்துக்கொள்.

(5) மித்துருத்தனத்திலிருந்துதான் சத்துருத்தனம் தோன்றுகிறது. இதற்கு நானே சாக்ஷி. உன்னை நான் நேசியாவிட்டால், பிறகு உன்மேல் எனக்குப் பகை வரக் காரணமேற்பட்டிராதே. நேசத்திலிருந்துதான் விரோதம், பகை, அநுகூல-சத்துருத்துவம் யாவும் உண்டாகின்றன. ஆகவே மற்ற அன்னியர்களைவிட, நேசர்களிடத்தில் அதிகமான கண் வைத்துவா. எந்த இடத்தில் எந்தத் தப்பிதம் வருமோ என அஞ்சி நடந்துகொள். நேசர்களிடத்தில் கொடுக்கல், வாங்கல் முற்றிலுமே இல்லாதிருப்பதானது சினேகத்தை விரோதத்தில் கொண்டுவராதிருக்க நல்ல உபாயம். நேசர்களுக்குக் கடனாகக் கொடுப்பதைவிட இனாமாகக் கொடுத்துவிடு. அது நல்லது, எந்த வகையிலும் பகை வராதபடி பார்த்துக்கொள். அதுதான் முக்கிய விஷயம்.

(6) உனக்கு மனம் பிடிக்காத நேசத்தை நீ உன் முதுகில் சுமந்துகொண்டு திரியாதே. நல்லவிதமாகவே மரியாதையுடனும் பிரியமாய்ப் பேசி, வந்தனம் சொல்லி, அந்த நேசத்திலிருந்தும் நீ பிரிந்துகொள்ளப்பார்ப்பதுஉனக்குஎவ்வளவோ பின்னுக்குநல்லது

இந்த ஆறு குறிப்புகளையும் சாதாரணமான நேசத்திற்கே நான் சொன்னது. அந்த நேசம்தான் ஒரு மனிதனின் வாழ்நாளில் விசேஷமாயும் மலிவாயும் சாதாரணமாயும் கிடைப்பதாகும். யதார்த்த அன்பு, யதார்த்த நேசம், யதார்த்த சகோதரத்வம், கீர்த்தியை நாடாத யதார்த்த தேசாபிமானம், யதார்த்தமான காதல் இவை யாவும் தற்கால நாகரீக உலகத்தில் மிக்க அருமையான வஸ்துக்களாகும்.

தெய்வகிருபையால், உண்மையான நேசன் உனக்குக் கிடைக்கும் பக்ஷத்தில் அவனை நீ முழுதும் நம்பிவிடு. உன் க்ஷேமத்

தை உன்னிலும் பதின்மடங்கு அதிகமாக அவன் கோருவான். உன் வேலைகளுக்கு அவன் வெகுதூரத்திலிருந்த போதிலும் சதா உதவி செய்தவனுகவே இருப்பான். நீயும் உன்னை யறியாமலே அவனிடத்தில் உயிர்விடுவாய். சதாகாலமும் புகழ்ந்து துதிப்பாய். இந்த நேசத்தில் மேலே சொன்ன ஆறுவிஷயங்களையும் பிரயோகிக்க முடியாது. இவ்வாறுன நேசம் உனக்குக் கிடைக்கவேண்டுமென்று கடவுளைப் பிரார்த்திக்கிறேன். உன்னைப் பற்றி ஒரு பாடலும் இசைத்துள்ளேன், அதனையும் கேள்.

"அரியநட் பினுநலம் ஆர்ந்தினிமை இவ்வுலகில்
அளிப்பதெது? அவ்வொன்று தான்
அகமெலாம் பரவசமும், ஆனந்த பூர்த்தியும்
அளித்திடும்; காண்போர் தமை
உருசிமிகு நேசமது ரக்கனியெ னெச்செயதன்
உயர்வுரைத் திடலாகு மோ?
உண்மைநட் புத்தாக மிகுதியால், அனைவரையும்
உற்றவர்க ளென்ன அவரை
மருவினுன், மயங்கினுன், உலகியல் அறிந்திடா
மாநேச மாட்சி மிக்கான்,
மற்றிதன் பயனுக, அவன் மோசவஞ்சனை
வலையினுள் வீழ்ந்து, தனது
மருமகன் கொலையாகத் தான்சிறைக் காளாகி,
மதியிலாப் பித்த னுனன்;
மனமொத்த மாசிலா நண்பரென மற்றவரை
மதித்தபே தமையி னுலே!"

இந்தப் பாடல் உன் விஷயத்தில் நன்கு பொருந்தும். நேசத்துக்காகவே நேசம் செய்து, அந்த நேசத்துக்காகவே உயிர் விடுவோரை நீ நாடு. வேறு காரணம் பற்றி வருவோரை ஒதுக்கி

ஓடு. பிரியத்துக்காகவே பிரியம் வைப்போரிடத்து நீயும் பிரியமாயிருக்கப் பார். பிறகு மனதுக்குப் பிரிவாற்ருமைத் துயர் தோன்றுமென்றெண்ணி, பட்டும் படாதவர்போல நேசம் பாராட்டுபவரும் உளர். வருஷங்கள் ஆக ஆக நேசத்தை மறப்போரும் உளர். நேர் சந்திப்பில் மட்டும் பல்லிளிப்போரும் உண்டு. தூரத்திலிருந்தால் மறந்துவிடுவோரும் அநேகர். இனி சுருட்டு நேசம், மூக்குப் பொடி நேசம். சாராயக்கடை நேசம், ரயில்—ஜட்காவண்டி நேசம் இதுபோன்று பல நேச மூட்டைகளும் உண்டு. இவற்றை யெல்லான் அறிழகம் என்ற சாக்கடையில் போட்டுவிடு.

"பொய்யாகு மிக்காயம் போற்றுவதற் கேபுரிந்து
செய்யாத பாவங்கள் செய்வாரே—வையகத்து
நில்லாத தென்றுணர்ந்தும் நீள்வானின் மின்னேபோல்
கல்லாத மானிடர்கள் காண்."

கடைசியில் என் மனைவியை என் உயிர்நேசனுகிய உன்னிடம் ஒப்புவிக்கின்றேன். எனது அந்தியக் கிரியைகளையும் நீ தான் சொந்தத் தம்பி போன்று இருந்து சகலமும் நடப்பிக்கவேண்டும். உன் பிரிய விஜயநாதனை என்றும் மறவாதே—என்று கூறிக் கொண்டு வரும்பொழுதே விஜயநாதனுக்குக் கண்கள் சுழன்றன. தாகம் தாகம் எனக் கதறினுன். மறு நிமிஷம் வாந்தி எடுத்தான். அதற்கடுத்த நிமிஷம் ரங்கபாஷியத்தின் இரு கைகளையும் தன் மார்பின்மீது வைத்தவனுய்ப் படுத்துக்கொண்டான். கடைசியாக, விஜயநாதன் ரங்கபாஷியத்தை வெகு உருக்கமும் நேசமும் பிரேமையுமான பார்வையால் பார்த்தான். கண்களி லிருந்து ஜலம் வடிந்தபடியே யிருந்தது. அதற்கடுத்த நிமிஷத்தில் கண்களை மூடினுன். அவனது ஆவியும் அவனை விட்டு நீங்கிற்று. ரங்கபாஷியம் அலறிக்கொண்டு அவன் பாதத்தருகில் வீழ்ந்து வாய்விட்டுக் கதறினுர். மார்பில் அறைந்து கொண்டார். பிரலாபித்தார். மூர்ச்சைபோயினுர். விஜயநாதனது மனைவியின் துக்கத்தை விவரித்தல் துயரப்பெருக்கே. பல பெண்களை நாடும்புருஷர்களுக்

குச் சொந்த மனைவியிடத்தில் அன்பில்லையாயினும், அப்பெண் மணிகளுக்குத் தம் காதலனே தாம் தொழுந் தெய்வமாவார். விஜயநாதனின் அந்தியகாலம் இவ்வளவு பரிதாபத்தோடும் சிறைச்சாலையில் விஷம் உண்டு உயிர் மாளும்படியாக நேர்ந்தது. அன்று எழுதினவன் அழித்து எழுதுவானா? துராகிருதமான விஷயங்களில் பிரவேசித்த விஜயநாதன், ஜெகநாத நாயுடு, ஸ்ரீநிவாசப்பிள்ளை ஆகிய இம்"மூவரின் முடிவு"ம் இவ்வாறாகித் தீர்ந்தது. முற்பகற் செய்யிற் பிற்பகல் விளையும், விஜயநாதனின் அந்தியக் கிரியைகள் யாவையும் ரங்கபாஷ்யம் தானே தனது கைகளாற் செய்து முடிப்பதானார்.

---

# அத்தியாயம்—18

## மனோ திருப்தி

---

நமது பிரேமநாதனுக்கு ஏற்பட்ட இரு ஜெகநாதர்களில் சத்துருவான ஜெகநாதன் இம்மாய உலகினின்றும் நீங்கினான். அவன் இப்பொய்யுடலை நீத்த மறு நாள், இரங்கோன் நாட்டினின்றும் பால்ய மித்திரனும் ஜெகநாதன்—ச. கோ. ஜெகநாதன்—திரிச்சிராப்பள்ளி வந்து சேர்ந்து சிறுபருவ நேயனான பிரேமநாதனைப் பிரேமையுடனும் சந்தித்துத் தனது பிரீதியைக் காண்பித்தான். தன் பெயருக்கு வந்த கடிதங்களை வேறொரு ஜெகநாதர் பெற்றுச் செய்த வேடிக்கைகளையும் கேட்டு வியப்பு மேற்கொண்டான். ஒருவருடைய கடிதங்கள் இன்னொரு அன்னியருடைய கைக்கு எட்டிப் போவதில், நேரும் அனர்த்தங்களின் முடிவும் இவ்வகைத் தாமென

நன்குணர்வதானான். தபாலாபீஸின் ஒரு சிறுபிழை எத்துணைப் பெருந்துயருக்கு இடனாய் விடுகின்றதென்பதையும் நன்கு நோக்கி னான்; பிரமித்தான். அந்த இளமையின்போது பாடசாலையிற் படித்தபோது நம்முடன் அன்பு குலாவிய அத்துணைத் தோழர்க ளில் நம் கண் முன்பு தற்போது தோற்றுவோர் எத்துணை பேர்? இரண்டொருவர் நம் எதிரில் காணப்படுவதும் அருமையேயா மென்க. பால்ய நேசர்களான இவ்விருவரையும் அவர்களது சந் திப்பு சந்தோஷத்தில் தித்திப்புடன் நிற்கும்படி அவர்களை இங்கு விட்டு விட்டு, மேலுள்ள விஷயங்களைக் கவனிக்கச் செல்வோம்.

*** *** ***

பிரேமநாதனின் விவாக தினமும் நெருங்கிற்று. ஸஞ்சீவ பாபுவும் அவரது தர்ம பத்தினியான பரிமளாவும் கல்கத்தாவி லிருந்தும் வந்து சேர்ந்தார்கள். இன்னும் விவாகத்திற்கு வர வேண்டிய அனைவரும் வந்து சேர்ந்தனர். பிரேமநாதனின் லண் டன்மா நகரத்து நேசர்களில் முக்கியஸ்தர்களும் வந்து கூடிக் கொண்டு ஆரவாரம் விளைத்தனர். முகூர்த்த தினத்துக்கு முதல் நாள் இரவு நம் கதா நாயகியான இராஜம்மாளுக்கு நலுங்கு வைத் தனர். சபையில் எல்லோரும் நிறைந்திருந்தார்கள். கனகவல்லி நலுங்கு வைப்பதற்காக வந்து நலுங்கிடலானாள். இது ஸஞ்சீவ பாபுவுக்கு வியப்பாயிற்று. ஜெகநாத நாயுடு இறந்து ஒரு மாதமாய் விட்டிருக்க, கனகவல்லி இன்னும் சுமங்கலி ரூபத்துடனும் யாதொரு நகைகளும் கழற்றாது, கழுத்தில் மாங்கல்யம் இலங்க, மஞ்சள் பூசிய வதனத்தோடும் நிற்பதைக் கண்டு கலவரம் மிகுந்தார். கனக வல்லி—விதவையல்லவோ என்று வாய்விட்டுக் கேட்பதானார். ஜெகநாத நாயுடு இறந்துவிட்ட விஷயம் பந்துக்கள் எவருக்குமே தெரியாதிருந்து, ஸஞ்சீவபாபு அப்போது கேட்டதற்குப் பிறகு தான் தெரிந்ததால் ஸபையில் ஒரு பெரும் கலவரம் உண் டாயிற்று. இதென்ன விசித்திரம்! புருஷன் கேவலம் கைதியானா லும் புருஷன்—புருஷன்தானே! அவன் இறந்து விட்டிருந்தும்,

162423



அதைப் பந்துக்களுக்குத் தெரிவியாமல் மூடி வைத்துவிட்டு, இன்னும் சுமங்கலியாக இருக்கும்படி செய்ததுமன்றி, நலுங்கிடுவதற்கும் வரும்படி செய்தார்களே! இதென்ன அக்கிரமம்?—என்று எல்லோருமே கேட்க ஆரம்பித்துக் கொண்டார்கள். ரங்கபாஷியம் நாயுடுவும், வேணுகோபால் நாயுடுவும் மௌனமானார்கள்.

இப்படி ஜாதிமுறைக்கு விரோதமாகச் செய்யலாமா? கல்லுப் பிள்ளையாரைப்போல் இரண்டு குழந்தைகளையும் ஜகநாத நாயுடுவினிடமாகக் கனகவல்லி பெற்றுக்கொண்டிருக்க, அவருக்கு இத்தனை வருஷங்களாக மனைவியாயிருந்து வாழ்க்கை நடத்தியிருக்க, அவர் இறந்து சிறைச்சாலையிலே அடக்கம் செய்யப்பட்டுப் போனதும் உண்மையா யிருக்க—கனகவல்லியை இன்னும் இதுவரை சுமங்கலியாக இருக்கவைத்தது ஞாயமா?—சரியா-என்று அனைவரும் கேட்கிறார்கள். சாஸ்திரப் பிரமாண முண்டானால் சொல்லுங்கள் என்கிறார்கள். இந்தக் கேள்விக்குப் பதில் எப்படி? இதற்கு ஆலோசனை என்ன?

*** *** ***

இந்த சமயத்தில் முக்கியஸ்தர்கள் மவுனமாக இருந்ததால் பந்துக்களுக்குள் மனஸ்தாபம் பெருகிற்று. எல்லோரும் எழுந்து போக முயன்றனர். பிரேமநாதன் சீக்கிரம் அவர்களுக்கு சமாதானம் கிடைக்கும் என்று திருப்தி செய்தான். தூண்டிமுட்காரனுக்கு மிதப்பு மேலேயே கண் என்பதுபோல, அச்சமயத்தில் ஸஞ்சீவ பாபு அங்குள்ள ஒருவரைக் கண்டு, உடனே தமது சட்டைப்பையி லிருந்து ஒரு பொட்டகிராப் படத்தை எடுத்து, அவருடைய முகத்திற்கும் அதற்கும் உள்ள பொருத்தத்தை ஒத்திட்டுப் பார்த்தார். இரண்டும் பெரும்பான்மையில் ஒன்றாயிருக்கவே, உடனே அவரைத் தான் கைது செய்வதாகத் தெரிவித்தார். நீர்தானா குலசேகரன், நீர்தானா லக்ஷ்மீகாந்தம் என்ற பெண்ணைப் பன்னீராயிர ரூபாய் பெறுமான ஆபரணாதிகளோடும். பைராகி வேஷத்துடன் மோசமாய் இட்டுச் சென்றவர், எழுந்திரு போலீஸ்

ஸ்டேஷனுக்கு, நான் கண்டுபிடிக்கத் தவறியது உன் கேஸ் ஒன்று தான், அதுவும் என் நல்லகாலம் அகப்பட்டுக் கொண்டாய்—என்று போலீஸ்த்வனியில் தமது முழு அதிகாரத்தையும் காண்பித்துக் கேட்டார்.

குலசேகரன் சிரித்துக்கொண்டே எழுந்து ஸஞ்சீவபாபுவை வணங்கினன். தன்னை விட்டுவிட வேண்டுமென்று கெஞ்சினன். ஒருபோதும் முடியாது—என்று ஸஞ்சீவபாபு கர்ஜித்தார். முடியும்படி தான் செய்வதாக, ரங்கபாஷ்யம் ஸஞ்சீவ பாபுவின் அருகே வந்து அவரை சமாதானப்படுத்திப் பின்வரும் விஷயங்களைத் தெரிவிப்பதானர்.

குலசேகரன் லக்ஷ்மீகாந்தத்தின் கணவனே யென்றும், அவர்கள் ரகசியமாக சென்னைக்குப் புறப்பட்ட காரணத்தையும் ஸஞ்சீவபாபுவுக்கு விவரமாகக் கூறினர். குலசேகரன் தன்னைக் காண்பதற்காகச் சென்னை வந்தபோது, தானும் அவருடன் புறப்பட்டு லக்ஷ்மீகாந்தத்தினிடம் போகத் தீர்மானித்ததாயும், பிறகு குலசேகரனைக் காணவில்லையென்றும், அதற்குப் பிறகு சென்ற மாதத்தில்தான் அவரைத் தாங்களெல்லோரும் பார்க்கும்படியா யிற்றென்றும் ரங்கபாஷ்யம் கூறினர்.

குலசேகரன்.—“அதற்கு மேற்பட்ட விஷயங்களை நான் கூறுகிறேன். லக்ஷ்மீகாந்தத்தை விட்டுப் பிரிந்து சென்னை வந்து சேர்ந்த நான் ரங்கபாஷ்யத்தைச் சந்தித்து ஸகலமும் சொன்னேன். பிறகு மறுநாள் காலையில் நான் ரங்கபாஷ்யத்துடனும் புறப்பட இருந்த சமயம் என்னை விஜயநாதன் ஒரு தெருவில் சந்தித்தான். லக்ஷ்மீகாந்தம் நகைகளோடும் காணமற்போனள் என்றும், போலீஸார் உன்னைத் தேடிக் கொண்டிருக்கிறார்களென்றும், ஆகவே தலை மறைந்தால்தான் தப்பமுடியும் என்றும் கூறினன். என் நெஞ்சு திடுக்கிட்டது. வயிறு பகீரென்றது. தலை சுழற்றியது. செய்யும் வகையேதும் தெரியாமற் கலங்கினேன். தப்பும் வழியில்லை. விஜயநாதனையே என்ன செய்யலாமென்று கேட்டேன்.

தன் வீட்டில் மறைந்திருக்கலாமென்று கூறினன். அதன்படியே சில வருஷங்கள்வரை அவன் வீட்டில் மறைந்திருந்தேன். பின்னர் ஜெகநாதநாயுடு மணியக்காரத் தெருவில் வீடு வாங்கிய பின்பு, அந்த வீட்டின் ஓர் அறையில் என்னை இருக்கச் செய்தனர். அந்த அறைக்குள் நிலஅறை ஒன்றுண்டு. அதில் என் காலம் கழிந்து வந்தது. இந்த சமயத்தில் கனகவல்லிக்கும் ஜெகநாத நாயுடுவுக்கும் திரிச்சிக்கு சமீபமான குணசேகரம் என்ற கிராமத்தில் விவாகம் நடத்தப்பட; அதற்கு நானும் சென்றிருந்தேன். அதிகாலை மூன்று மணிக்கு முகூர்த்தம் வைக்கப்பட்டிருந்தது. ரங்கபாளையத்தின் பிரதான நண்பனைத் தன்னை விஜயநாதன் தனலக்ஷ்மி அம்மாளுக்குக் காண்பித்துக்கொண்டு, 12-ஆயிரம் ரூபாய் நகை என்ற ஆசை வார்த்தைகளால் அந்த 'அம்மையை நன்கு மயக்கி 'சொக்குபொடி' போட்டு, சம்மதிக்க வைத்து, ரங்கபாளையம் எவருமே ஊரிவில்லாதபோது பந்து ஜனங்களுக்கும் தெரிவியாமல், இந்த சமயம் தவறினல் பெரிய இடத்துச் சம்பந்தமே தவறிப்போகுமென்று தனலக்ஷ்மியை ஏமாற்றி, பெண்ணையும் தாயையும் குணசேகரத்துக்கு இட்டுவந்து இவ்வளவு வேலைகளையும் விஜயநாதன் வெகு சாமர்த்தியமாக நடத்திவிட்டான். ஆனல் கடைசியில் மட்டும் என்ன செய்கிறதென்று கையைக் கடிப்பதானன்."

ஸஞ்சீவபாபு :—"ஏன் அப்படி ?"

குலசேகரன் :—"விவாக சந்தர்ப்பத்தில் மாப்பிள்ளையான ஜெகநாதநாயுடு ஸ்நானம் முதலியவைகள் செய்யவேண்டுமென்றும், அது கட்டாயமென்றும் சூழ இருந்தவர்களும், கிராமத்தார்களும் பலமாக வற்புறுத்தியதால் தான். விஜயநரிதன் ஆனமட்டுக்கும் சமாதானம் சொல்லிப் பார்த்தான். தனலக்ஷ்மி அம்மையே இதற்கு ஒப்பாது என்று நான் அவன் மனதில் நன்கு படும்படி போதித்தேன். விவாக முகூர்த்தத்திற்கு முன்பு மாப்பிள்ளையும் அவர் ஸகோதரியும் மனையில் உட்கார்ந்து நலுங்கிட்டுக் கொள்வது எங்கள் குலத்தில் வழக்கம். அப்பொழுது ஒரு வஸ்

திரம் மட்டும் இடுப்பில் கட்டிக்கொண்டு முதுகு முதலியவற்றை மூடாமல் மனையில் திருமணப் பந்தலில் உட்கார நேரும். நலுங்கிட்டு எண்ணெய் தேய்ப்பது வழக்கம். விஜயநாதன் திகைத்தான். அதுவும் கிரமமே. எவ்வளவோ பாடுபட்டு தனலக்ஷ்மி அம்மாளைத் தனது குமார்த்தியின் விவாகத்துக்கு சம்மதிக்க வைத்தவன். அவன் பட்ட கஷ்டம் அவனுக்குத் தெரியும். ஜெகநாத நாயுடுவைக் குறித்துப் புகழ்ந்து பேசியது இவ்வளவவ்வள வன்று. அதில் சிலதை நான் மனப்பாடமும் செய்திருப்பதால் இங்கு சொல்லுகிறேன். "மணியக்காரத் தெருவில் நல்ல குலத்தில் ஒருவன் உண்டு. சிறு பிராயமே. நல்ல படிப்பும் சன் மார்க்க லக்ஷணமும் வாய்க்கப் பெற்றவர். தக்க ஸம்பாத்திய முண்டு. ஸாது சீலர். சொன்னபடி கேட்பவர். நெறி பிறழா தவர். உத்தமர். பல நாடுகளிலும் சிறந்த பேரெடுக்கத் தகுந்தவர். கௌரவமான காரியங்களும் எண்ணங்களும் கொண்டவர். புஸ்தகப் படிப்பில் மிக்க ஆசை வைத்தவர். பல நூல்கள் இயற்றக் கூடிய யோக்கிதையும் உண்டு. சொந்தமான வீடும் இருக்கிறது. பெற்றோர்கள் வெகு உத்தமர். பழய காலத்து மனிதர்கள். ஸாதுக்கள். டாம்பீகமும் புது நாகரீக வேஷமும் தெரியாதவர்கள். பெரிய அந்தஸ்துள்ள குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். ஜாதி குலம் ஆதியனவும் உயர்ந்ததே யன்றி வேறு பேதமின்று. நம்பலாம். நமது சொந்த வீடு போல் பாராட்டலாம். மாமி நாத்தி கொடுமைகள் கிடையா. கண்டபடி அதிகாரங்கள் செய்யும் ஆரவாரங்கள் இங்கு இராது. விவாகமானுல் தம்பதிகள் ஒற்றுமையுடனும் மங்களமாக வாழ்வர்." நல்ல இடம், வரன் நல்ல புத்திசாலி, சுகுணசுகிர்த சுந்தரன். வசன சாதுர்ய முகவஜீகர பால மன்மதன். தாழ்ந்து பணிந்து வணங்கி நடப்பவன். லோக கஷ்டங்களில் நன்கு பண்பட்டவன். உலகியல் இனிதறிந்தவன். சோம்பேரி யல்லன். சுறுசுறுப்புசாலி, சிவப்பு மேனியன், விஸ்வாஸ மனத்தினன், நன்றி யுணர்ச்சி நிரம்பப் பெற்றவன். நியாய வழியில் நடப்பவன். இது தற்புகழ்ச்சியன்று. வீண் வளர்ப்பு